விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

GTV Express Parcel.lk
பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
இங்கிலாந்து - Rs.1400/= அவுஸ்திரேலியா - Rs.1700/=
ஜெர்மனி - Rs.1900/= சுவிஸ் - Rs.2550/=
பிரான்ஸ் - Rs.2000/= இத்தாலி - Rs.2250/=
GTV Enterprises (Pvt) Ltd (1335) 011 4 654 444
இல.25, கந்தசாமி கோவில் சாலை,
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 255 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை (31.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி கோரி யாழில் போராட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சனிக்கிழமை மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## மனிதப் புதைகுழிகளை அகழ்வது மட்டும் நீதியை வழங்காது

### ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு உறவுகள் கடிதம்

(யாழ்ப்பாணம்)

மனிதப் புதைகுழிகளை அகழ்வது மட்டும் நீதியை வழங்காது என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர்

04ஆம் பக்கம் பார்க்க

## நீதி கோரி கிழக்கிலும் ஆர்ப்பாட்டம்



23ஆம் பக்கம் பார்க்க

## எதிர்வரும் 6ஆம் திகதி

# நாட்டு மக்களுக்கு ரணில் விசேட உரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 6ஆம் திகதி நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

கட்சியின் மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் அன்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி இந்த விசேட உரையினை

23ஆம் பக்கம் பார்க்க

# செம்மணி மனிதப் புதைகுழியில் 10 மனித எச்சங்கள் அடையாளம்

### ஒன்றன் மேல் ஒன்றாகவும் எலும்புக்கூட்டுத் தொகுதி இனங்காணப்பட்டது



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் 10 மனித எச்சங்கள் நேற்று புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதில் இரண்டு எலும்புக்கூட்டுத் தொகுதிகள் ஒன்றன் மேல் ஒன்றாகக் காணப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி அநுர குமார நாளை யாழ்.விஜயம்

### பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை 01ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்

23ஆம் பக்கம் பார்க்க

## இந்தோனேசியாவில்

### கைது செய்யப்பட்ட பாதாளக் குழுவினர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்

(கொழும்பு)

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட பாதாளக் குழு உறுப்பினர்கள் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்

23ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழியில்

# 200 ஐ அண்மித்த மனித எச்சங்கள்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் எண்ணிக்கை 200ஐ அண்மித்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வு யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

கனடா, ஐரோப்பா சூரியன் செவ் மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை. உங்கள் தகுதிக்கு ஏற்ற மணமகன், மணமகள் பார்த்துத் தரப்படும். (1502)

077 889 4353/0049 7647 52219
0049 1741 789740 (whatsapp)


## யானை தாக்கியதில் புத்தளத்தில் ஒருவர் பலி

(புத்தளம்)

புத்தளம், நவகத்தேகம, கெலேவெவப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் நேற்று முன்தினம் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நவகத்தேகமப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நவகத்தேகம, கெலேவெவப் பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய நபர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் 2 ஏக்கர் தென்னந்தோப்பில் தனியாக வசித்து வந்த நிலையில் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)

## அம்பாறையில் கோரவிபத்து ஒருவர் பலி; 57 பேர் படுகாயம்

அம்பாறையில் பேருந்தொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 52 பேர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறை அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் கோமாரிப் பகுதியில் நேற்று(30) மாலை கெப்பட்டிபொலப் பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற பேருந்தொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதுடன் சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கு காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல உயர்தர சைவ உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது.

- சைனீஸ் உணவுகளைத்தயாரிக்கும் சமையலாளர்(Chef)
- உணவு பரிமாறுபவர் (Waiter)
- சமையல் உதவியாளர் (Kitchen Helper)
- தேநீர் தயாரிப்பவர் (Tea maker)
- உணவுப்பொதி செய்பவர் (Parcel Maker)

தொடர்புகளுக்கு: (5190)

077 711 2269

வெளிநாட்டில் or உள்நாட்டில் வேலை பெறுவதற்கான பாடநெறிகள்

ஆண் / பெண் இருபாலருக்கும்

Canada / UK / USA / Dubai Malaysia / Singapore

போன்ற நாடுகளுக்கு வேலை வாய்ப்பு தேடுபவர்களா நீங்கள்?



- Child Psychology
- Montessori Teacher Training
- Primary Education
- Spoken English
- Graphic Designing
- Video Editing
- Hardware Engineering
- Software Engineering
- Web Development
- Draftsmanship
- Civil Engineering-UK
- Quantity Serveying-UK

(C-256)

குறைந்த காலத்தில் கற்பித்தல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் TVEC / Foreign Ministry

வெளி மாணவர்களுக்கு Online வகுப்புக்கள்

Study Center
New Way Sky Line
International College (Pvt) Ltd
No 7, W.A.Silva Mawatha, Colombo 06.
Phone: 077 5151 345
WhatsApp: 077 33 47 332

## விமலம் திருமண சேவை

1990ல் பிறந்த, இஞ்சினியர், கனடா Citizen, உத்திராடம் 4ம் பாதம், செவ்வாய் இலக்கணத்தில் கிரகபாவம் 27¼ உடைய மணமகனுக்கு ஊரில்/ கனடாவிலுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர். (5183)

077 240 9276, + 1416 7716 013

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தாராளமாக உள்ளனர். (5183)

077 240 9276, + 1416 7716 013

## நாகபூஷணி திருமண சேவை


வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும். (C-3773)

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில் லிங்கா பெஷன் எதிர் ஒழுங்கை)

077 138 7596, 071 999 9306

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.08.2025 சனிக்கிழமை அன்று முப்புரம் எரித்தோனின் பாதக்கமலங்களைச் சரணடைந்த எமது குடும்பத் தலைவன்

### அமரர் வினாசித்தம்பி மயில்வாகனம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 31.08.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 05.00 மணியளவில் உபயகதிர்காமம் பெரிய தேவனத் தாய் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும்.

01.09.2025 திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிரியைகளிலும் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கந்தமுருகேசனார் வீதி,
உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு.
(C-3771)
குடும்பத்தினர்

## சுண்டுக்குளி சனசமூக நிலையம்

### 95வது ஆண்டு விழா

அமரர்கள் யோகராசா - ராசமலர் தம்பதிகளின் ஞாபகார்த்தமாக மகன் யோ.றொனிக்கல் அவர்களின் அனுசரணையில்

### மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

(5189)

காலம் : 06.09.2025 சனிக்கிழமை

நேரம் : காலை 6.00 மணி (நிலைய முன்றல்)

மேற்படி போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள் பின்வருவோருடன் தொடர்பு கொள்ளவும்.

சி.யசிகரன் - 075 905 0242
ம.இளங்கோ - 071 068 0538

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு பணியாளர்கள் தேவையாக உள்ளது.

### பணிநிலை வெற்றிடங்கள்

1. கறவை பசுப்பண்ணை பராமரிப்பாளர் - ஆண்
2. சமையலாளர் - (ஆண், பெண்)

### பணிகளுக்கான தகைமைகள்

1.வயதெல்லை 25 - 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2.தொழில் முன் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
3.நல்ல உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4.தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு விரும்புவோர் முன்னுரிமைப்படுத்தப்படுவார்கள்.

(C-3768)

குறித்த பகுதிகளில் கடமையாற்ற விரும்புவர்கள் எதிர்வரும் 10.09.2025 இற்கு முன்னர் தங்களது சுயவிபரத்தினை தொலைபேசி மூலமாகவோ அல்லது கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு வருகைதந்தோ வழங்க முடியும்.
குறிப்பு : சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படுவதோடு, கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.

021 492 3118
077 324 0950

ச.மோகனபவன்
தலைவர், மகாதேவ சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோர் குறித்த முறைப்பாடுகள்

# மீண்டும் தொடங்கப்படும்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கில் பதிவான 10,000 இற்கும் மேற்பட்ட காணாமல் போனோர் குறித்த முறைப்பாடுகள் மீண்டும் தொடங்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**



காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றிற்கு புதிய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறிய அவர், இந்த விசாரணைகளைத் தொடங்க அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடாக 375 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

காணாமல் போனோர் அலுவலகத்தால் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வலிந்து காணாமல் போனோர் தின நிகழ்வில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்க ஒரு விரிவான இழப்பீட்டு முறை செயற்படுத்தப்படும்.

பாரபட்சமற்ற நீதியை உறுதி செய்வதற்கான ஒரு புதிய சட்ட கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான நிர்வாகத்தின் கீழ் அரசாங்கக் கொள்கையில் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகள் மையமாக இருக்கும் என்றும் வலியுறுத்தினார். (நி)

## குறைவடைந்த தேயிலை உற்பத்தி



(கொழும்பு)

கடந்த ஒரு வருடமாக நாட்டில் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளதாக தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

இதன் பிரகாரம் கடந்த வாரம் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 5.1 மில்லியன் கிலோகிராம் ஆகும்.

3 மாதங்களுக்கு முன்னர் வாரமொன்றிற்கு சுமார் 6 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது.

வரட்சி மற்றும் வளர்ச்சியின்மையால் அறுவடை குறைந்துள்ளதாக தேயிலை உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி)

## அதிவேக நெடுஞ்சாலையில் ஆசனப்பட்டி கட்டாயம்

### வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகும்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் செல்லும் பயணிகளுக்கு ஆசனப்பட்டி அணிவதைக் கட்டாயமாக்கும் வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியிடப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரும், பாராளுமன்ற சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பிமல் ரத்நாயக்க தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக இதனை நடைமுறைப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பாடசாலை பேருந்துகள், அலுவலக சேவைப் போக்குவரத்து பேருந்துகள், சுற்றுலா பேருந்துகள் மற்றும் ஏனைய பேருந்துகளுக்கும் ஆசனப் பட்டிகளைப் பொருத்துவதற்கு சுமார் 3 மாத கால அவகாசம் வழங்கப்படும்.

குறிப்பாக, சுமார் 2,000 ரூபாவாக இருந்த ஆசனப் பட்டிகளின் விலை தற்போது 5,000 முதல் 7,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நுகர்வோர் சேவைகள் அதிகார சபையினால் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

அத்துடன், தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்து, அதிவேக நெடுஞ்சாலைக்குள் வாகனங்கள் நுழையும்போது வாகன உதிரிப் பாகங்களின் தரத்தைப் பரிசோதித்து புள்ளிகள் வழங்கும் முறையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்ததுடன் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

அத்துடன் வாகனங்களின் டயர்கள் தேவையான தரத்தில் இல்லாவிட்டால், அதிவேக நெடுஞ்சாலைக்குள் வாகனத்தை நுழைய அனுமதிக்கப்படமாட்டாது .

முச்சக்கர வண்டிகள், வான்கள் உட்பட தனியார் போக்குவரத்துத் துறையின் சாரதிகளுக்காக நலன்புரி நிதியமொன்றை உருவாக்குவதற்கான பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும், இது தொடர்பான சட்டமூலம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார். (நி)

## பொலிஸ் அதிகாரிகளின் சட்டவிரோத செயல் முறைப்பாடளிக்க தனிப்பிரிவு

### பொலிஸ் தலைமையகம் திட்டம்

(கொழும்பு)

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் செய்யும் சட்டவிரோத மற்றும் முறைகேடுகள் குறித்த முறைப்பாடுகளைப் பெறுவதற்கு தனிப் பிரிவுகளை நிறுவ பொலிஸ் தலைமையகம் திட்டமிட்டுள்ளது.

கையூட்டல் கேட்பது, தொழிலதிபர்களிடமிருந்து பணம் பெறுவது, பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்கத் தவறுவது மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறுவது உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுவதற்காக இந்தப் பிரிவுகள் நிறுவப்படும் என்று பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழல் தடுப்புப் பிரிவு போன்ற ஒரு சிறப்புப் பிரிவாக இதை நிறுவுவது குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. (நி)

## சுற்றுலா விடுதிகளாக மாறும் ஜனாதிபதி மாளிகைகள்

(கொழும்பு)

நுவரெலியா, அனுராதபுரம், மஹியங்கனை மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளில் உள்ள ஜனாதிபதி மாளிகைகள் மற்றும் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை சுற்றுலா விடுதிகளாக அபிவிருத்தி செய்வதில் முதலீடு செய்யுமாறு வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற போது ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய வெறும் ஊக்குவிப்புத் திட்டங்கள் மட்டும் போதாது என்றும், அரச மற்றும் தனியார் துறைகளை ஒருங்கிணைக்கும் புதிய மூலோபாயத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார். (நி)

## நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழர் வாழ்வுரிமை மையம் ஏற்பாடு செய்துள்ள கிருஷாந்தி கொலை வழக்கு விசாரணை தொகுப்பு நூலான “வன்மம்” எனும் நூல் அறிமுக நிகழ்வு தெ. மதுசூதனன் தலைமையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு செம்மணிச் சந்தியில் இடம்பெறவுள்ளது. (3)

## மருத்துவ பீடங்களை மேம்படுத்த திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மருத்துவ பீடங்களின் வசதிகளை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்தது.

சப்ரகமுவ, மொரட்டுவ, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் மதுர செனெவிரத்ன தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 12 மருத்துவ பீடங்கள் செயற்படுகின்றன.

இவற்றில் வருடாந்தம் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபருக்கு மணிவிழா வாழ்த்துக்கள்



இன்று சிறப்பான கல்விப் பணியை நிறைவு செய்து ஓய்வுபெறும் திருமதி வாசுகி தவபாலன் அவர்கள் மணிவிழாக் காணும் இந்தத் தருணத்தில் கோட்டக் கல்வி அலுவலகத்தின் சார்பாகவும் எனது சார்பாகவும் உங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நீண்ட காலமாக கல்வித் துறையில் தங்களை அர்ப்பணித்து, கல்வி மேம்பாட்டிற்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் வழங்கிய உங்களது அர்ப்பணிப்பான சேவைகள் மிகுந்த பாராட்டுக்குரியவை. அதிபராக இருந்த காலப்பகுதியில், பாடசாலை நிர்வாகத்தில் வெளிப்படுத்திய உங்கள் தலைமையாற்றல், ஒழுக்கம், தொலைநோக்குப் பார்வை மற்றும் கல்வித் தரத்தை உயர்த்திய உழைப்புகள் அனைத்தும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நீங்கள் வழிகாட்டிய தலைமுறைகள் இன்று பல துறைகளில் சாதித்து வருகின்றன என்பது உங்கள் உழைப்பின் உண்மையான பலனாகும். மாணவர்களின் நற்பண்பு வளர்ச்சிக்கும் கல்வித் திறன் மேம்பாட்டிற்கும் நீங்கள் கொண்டிருந்த அக்கறை எப்போதும் நினைவில் நிற்கும்.

நீங்கள் பணியாற்றிய காலத்தில் கல்விக் கோட்டத்திற்காக வழங்கிய பங்களிப்புகள், கல்வித் துறையின் வரலாற்றில் பொற்குறிப்பாக இடம் பெறும் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை.

ஓய்வு என்பது ஒரு முடிவு அல்ல அது புதிய வாழ்க்கையின் தொடக்கம் என்பதை நினைவுபடுத்திக் கொள்கிறோம். இனி வரும் நாட்களில் நல்ல ஆரோக்கியம், அமைதி, குடும்ப மகிழ்ச்சி மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழ கடவுள் அருள்புரிவாராக.

கல்வித் துறைக்காகச் செய்த உங்களது அரிய பங்களிப்புகளை எப்போதும் பெருமையுடன் நினைவுகூருகிறோம்.

**கு.லங்கா பிரதீபன்**
**கோட்டக்கல்வி அலுவலர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.** (C-3769)

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

மணிவிழா மலர் 20ஆம் பக்கம்...

# மரண அறிவித்தல்

## செல்லையா பாலரத்தினம் [நெல்லியான் பாலா]

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் நாரம்பிட்டிய,
முன்னாள் பராமரிப்பு முகாமையாளர் Phoenicia Hotel kuwait )



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் நெல்லியான் மற்றும் தொல்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. செல்லையா பாலரத்தினம் அவர்கள் 28.08.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - பொற்கொடி தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயலக்சுமியின் அன்புக் கணவரும் விஜிதா (மருந்தாளர் கனடா), கலாநிதி (Dr).சுமிர்த்தா (துணைப் பேராசிரியர் USA), பிருந்தாவன்(சிரேஸ்ர பொறியியலாளர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவச்செல்வன் (கனடா), தணிகைக்குமரன் (பௌதிகவியல் ஆசிரியர், USA) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷகானா (கனடா), ஷஞ்சனா (கனடா), ஷதுர்சனா(USA), சத்விஹா (USA) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், செல்வரத்தினம், இராசரத்தினம், (முன்னாள் இரசாயனத் தொழிற்சாலை மேற்பார்வை யாளர் பரந்தன்), விஜயரட்ணம் (ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர்), சிவகுமாரன் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்) மற்றும் சந்தனகுமரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலக்சுமி, காலஞ்சென்றவர்களான இராசகுமார் (ஓய்வு பெற்ற அதிபர்), சந்திரகுமார் மற்றும் சூரியகுமார் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), தனலக்சுமி, செல்வலக்சுமி, ஸ்ரீகுமார் (உரிமையாளர் - V.S Red Onion Seeds)மற்றும் நந்தகுமார் (உதவிப் பொலிஸ் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று 31.08.2025 ஞாயிற்றுக் கிழமை தொல்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில் பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பிருந்தாவன் (மகன்): +94776420783** (Srilanka)
**விஜிதா (மகள்) : +016476325469** (Canada)
**சுமிர்த்தா (மகள்) : +012409106613** (USA)

(5193) *தகவல் : குடும்பத்தினர்*

## மனிதப் புதை...

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

2025ஆம் ஆண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சர்வதேச தினத்தில் சர்வதேச சமூகத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறோம் என்ற விழிப்புடன் இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

“இலங்கை அரசாங்கப் படைகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களாகிய நாங்கள், இந்தப் புனிதமான நாளில், உங்கள் அவசர கவனத்தையும் தீர்க்கமான நடவடிக்கையையும் கோரி மீண்டும் ஒருமுறை உங்களுக்குக் கோரிக்கை முன்வைக்கிறோம்.

வடக்கு மற்றும் கிழக்கின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் உறுப்பினர்களாக, இலங்கையின் வடகிழக்கில் தொடர்ந்து 3,000 நாட்களுக்கும் மேலாக நாங்கள் இடைவிடாமல் போராட்டம் நடத்தி வருகிறோம்.

எங்கள் கோரிக்கைகள் மாறாமல் உள்ளன. காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் அன்புக்குரியவர்களுக்கு நீதி கிடைக்க ஒரு சர்வதேச நீதித்துறை பொறிமுறையை நிறுவுதல் மற்றும் எதிர்காலத்தில் காணாமல் போவதைத் தடுக்க சர்வதேச மேற்பார்வை தேவை என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

உலகைப் பொறுத்தவரை, இது ஒரு நினைவுநாள். எங்களுக்கு நீதி இல்லாமல் நினைவுகூருதல் நமது வலியை மேலும் ஆழப்படுத்துகிறது. இந்தநாள் வெறும் அடையாளமாக இருக்குமா? அல்லது அது உண்மையான பொறுப்புக்கூறலுக்கு வலுச் சேர்க்குமா? என்பதை சர்வதேச சமூகம் தீர்மானிக்க வேண்டும்.

மேலும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் 2025க்கு இடையில் யாழ்ப்பாணத்தின் செம்மணியில் நடந்த புதைகுழி அகழ்வுகளின்போது இதுவரை 190க்கும் மேற்பட்ட மனித என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அவற்றில் கைக்குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் என்புக்கூடுகளும் அடங்கும். அது மட்டுமல்ல சிறுவர்களின் பாடசாலைப் பைகள் மற்றும் ஆடைகள் போன்ற தனிப்பட்ட உடைமைகளுடன், பால் போத்தல்களும் பொம்மைகளும் கூட வெளிவருகின்றன.

இவ்வாறே வடக்கு கிழக்கு எங்கிலும் பல மனிதப் புதைகுழிகள் இருக்கும் என அஞ்சுகிறோம். குறிப்பாக மிகப் பெருமளவில் தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலும் 2009 முள்ளிவாய்க்காலிலும் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் நிலை குறித்து மிகவும் அச்சமடைகின்றோம்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழிகளில் இதுவும் ஒன்றாகும். இருப்பினும் புதைகுழிகளை அகழ்வது மட்டும் நீதியை வழங்காது. குற்றவாளிகள் மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்களும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும். உள்நாட்டு வழிமுறைகள் தோல்வியடைந்துள்ளன என்பதை வரலாறு காட்டுகிறது.

கீழ் மட்ட வீரர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அரிதான நிகழ்வுகளில், பின்னர் அவர்கள் அரசியல் தலைவர்களால் மன்னிக்கப்பட்டனர். விடுதலையே செய்யப்பட்டுள்ளனர். உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் நீதியை அடைய முடியாது என்ற நமது நீண்டகால நிராகரிப்பை இது வலுப்படுத்துகிறது. காணாமல்போனவர்கள் அலுவலகம் (OMP) பலவீனமானது, அரசியல் மயமாக்கப்பட்டது மற்றும் திறமையற்றது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

பல வருட வாக்குறுதிகள் இருந்த போதிலும் அது உண்மை அல்லது பொறுப்புக்கூறலை வழங்கவில்லை. ஒரு அரசு தனது சொந்தக் குற்றங்களை நம்பகத்தன்மையுடன் விசாரிக்க முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. OMP மற்றும் உள்நாட்டுப் பொறிமுறைகள் மீது நம்பிக்கை இல்லை” எனக் குறித்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (ம-7)

## வலிந்து...

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன் னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்குச் சர்வதேச நீதி கோரி நேற்று வடக்கு, கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.கிட்டுப் பூங்கா முன்றலில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஒன்றுதிரண்ட போராட்டக்காரர்கள், அங்கிருந்து பேரணியாக மனிதப் புதைகுழி காணப்படும் செம்மணிப் பகுதிக்கு அண்மையாகச் சென்று நீதி கோரி கோஷமிட்டனர்.

“தமிழின அழிப்புக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும்” என்று அவர்கள் இதன் போது வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஒட்டுமொத்தத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ம-7,33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யோகக்கலை கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 13.09.2025 சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (8)



மன்னார் நானாட்டான் டி லா சால் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மருத்துவ முகாம் அண்மையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. (படம்: ஜோசப்நயன்)

# முதியோர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புலோலி வடகிழக்கு (ஜே/408) முதியோர் சங்கத்தால் முதியோருக்கான அடையாள அட்டைகள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புலோலி வடகிழக்கு உத்திராவத்தை "ராஜன் பதி" மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முதியோர் சங்கத் தலைவர் இ.கிருபாகரசூரியன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதியோர் அடையாள அட்டைக்காக ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் நேரில் வருகை தருவதன் மூலம் குறித்த அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவித்துள்ளனர். (3)

# இளைஞர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தி ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான கருத்தரங்கு ஒன்று "நடைமுறையில் காந்தியக் கொள்கை" என்ற தலைப்பில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 1.30 மணி வரை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் 18 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ள முடியும். இதில் சிறப்பு விருந்தினராக காந்திய சிந்தனையாளர் மதுரை பேராசிரியர் முனைவர் க.பழனித்துரை கலந்து கொள்கிறார்.

பங்குபற்ற விரும்புவோர் 077 031 8824 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (3)

# செல்லத்துரை ஞாபகார்த்த கலைப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தனிப்போட்டி, குழுப் போட்டி என இரு பிரிவாக நடத்தப்படும். இப்போட்டிகளில் தனிப்போட்டியில் பஞ்சபுராணம் ஓதல், அபிநய நடனம், பேச்சு, விநாடி வினா, கதாப்பிரசங்கம் என்பனவும் குழுப்போட்டியில் புராணபடலம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், நாடகம் என்பனவும் நடத்தப்படவுள்ளன.

போட்டி தொடர்பான விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் என்பன பாடசாலைகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பங்குகொள்பவர்கள் அதிபர் அல்லது தலைவர் ஊடாக இறுதித் தினமாகிய 2025.09.13 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 077 197 4332 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (3)


## மணமகள் தேவை

யாழ் இந்து 1993 ரோகிணி லக்கினத்தில் குற்றமற்ற செவ்வாய். கிரக பாவம் 62, உயரம் 5 அடி 1 அங் உடைய கொழும்பில் பட்டயக் கணக்காளராக வேலை செய்யும் மகனுக்கு குடாநாட்டைச் சேர்ந்த தொழில் புரியும் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 071 536 0857 (C-253)

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மானிப்பாய் பிரதான வீதிக்கும் மிக அண்மையில் (40 மீற்றர் தூரத்தில்) அமைந்துள்ள ஏறத்தாழ 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. காணி வாங்க விரும்புவோர் மட்டும் விற்பனையாளருடன் நேரடித்தொடர்பு கொள்ளவும்

தொலைபேசி: 077 726 0194 (C-252)

## வீடு வாடகைக்கு

மந்திகை வைத்தியசாலைக்கு அருகில் உபய கதிர்காம கோயிலிற்கு பின்னாக பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 071 838 7393 (C-254)

NORTHERN UNI | OCTOBER INTAKE | 2025

SLIIT உயர்கல்வி நிறுவனத்தின் இளமாணி பட்டப்படிப்புகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன

BSc (Hons) in IT
- Artificial Intelligence
- Data Science
- Software Engineering
- Cyber Security
- Information Technology

BBA(Hons)
- Accounting & Finance
- Business Analytics
- Business Management
- Marketing Management
- Logistics & Supply Chain Management

"Aptitude Test are Open Now"

- Globally recognized curriculum
- Excellent Teaching Panel
- Internship opportunities
- Job placements both in India and Sri Lanka
- Join a degree programme that has produced more than 45000 successful graduates.

(C-255)

வடக்கில் தரமான கல்வியுடன் உறுதியான வேலை வாய்ப்பு எமது SLIIT NORTHERN UNI இல் மட்டுமே!

MOE & UGC Approved Degree

SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna

021 7534 807

northernuni.lk apply@northernuni.com


# 'சிறுவர்களைப் பாதுகாப்போம்' வவுனியாவில் பேரணி!




(வவுனியா)

சிறுவர்களைப் பாதுகாப்போம், சிறுவர்களிற்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றாக திகழ்வோம் என்னும் தொனிப்பொருளில் வவுனியாவில் பேரணி ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

நெகோமியா அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் இலங்கை திருச்சபை திருக்கலவன் பாடசாலைக் கருகில் இருந்து ஆரம்பமான குறித்த பேரணியானது ஏ9 வீதியின் ஊடாக வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நிறைவடைந்திருந்தது.

பொதுமக்கள், சிறார்கள் என பலரும் கலந்து கொண்ட இப்பேரணியில், நாம் மென்மையானவர்கள் எம்மீது வன்மத்தை தீர்க்காதீர்கள், என்னை மற்றவர்களின் திறமைகளோடு ஒப்பிடாதீர்கள் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு பேரணியில் ஈடுபட்டிருந்தனர். (8-250)


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராசையா பாலசிங்கம்

மண் மகிழ 15.08.1945

விண் மகிழ 11.09.2024

கடந்த 11.09.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இ.பாலசிங்கம் அவர்களின் 1 ஆம் ஆண்டு நினைவு நாள் 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளில் வாழும் குடும்பத்தினர்.

நீர்வேலி மத்தி, நீர்வேலி.

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

(1496)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட நீதிமன்றம்- பருத்தித்துறை

வழக்கு இல : 199/25
தன்மை : நம்பிக்கைப் பொறுப்பு

வல்லிபுரநாதன் முரளி
இல 23B 4/4 Vanderwart Place
தெஹிவளை

மனுதாரர்

எதிர்

சிவானந்தஐயர் மகேந்திரசர்மா
திக்கம்,
அல்வாய் மேற்கு

எதிர்மனுதாரர்

## அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மனுதாரர் நம்பிக்கைப்பொறுப்புகட்டளைச்சட்டத்தின் பிரிவு 112 இன் கீழாக துந்தாவத்தை சித்திவிநாயகர் (துளாயிற்பிள்ளையார்) ஆலயம் மற்றும் ஆலயத்தின் சொத்துக்கள் மற்றும் ஆதனங்களை நிரவகிப்பதற்கான உரித்தாக்கற் கட்டளை வழங்குமாறு கோரி மனுதாரரால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

குடியியல் நடவடிக்கைமுறைச்சட்டக்கோவை பிரிவு 16 இன்கீழ் மேற்படிவிடயத்தின் மீது உரிமையுள்ளவர்கள் , அக்கறையுள்ளவர்கள் என்ற ரீதியில் எவராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் தமது ஆட்சேபனையை 2025ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இம்மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நீதிமன்ற கட்டளைப்படி
கையொப்பமிடப்பட்டுள்ளது
பதிவாளர்
மாவட்டநீதிமன்றம்
பருத்தித்துறை
றபர் முத்திரை இடப்பட்டுள்ளது

வரைபு
கையொப்பமிடப்பட்டுள்ளது
மனுதாரரின்சட்டத்தரணி
றபர் முத்திரை இடப்பட்டுள்ளது

## ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிபகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று

01. அல்வாய் மழவராயகுறிச்சியிறை, "கணிஞ்சாவத்தை" நில.பர 7, 1/8 மேற்படி வீடு 1, எல்லை கிழக்கு துந்தாவத்தை சித்தி விநாயகர் கோவில் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கும் தெற்கும் எனக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள், தென்னைகள், கமுகுகள் அடங்கலிற் சொரியலாய் (1/8) எட்டிலொன்றும், கிணற்றிலிதற்குரிய பங்கும்.

02. அல்வாய் மணிவீரபாகு தேவன் குறிச்சியிறை, "கணிஞ்சாவத்தை" நில.பர 02, 5/16, எல்லை கிழக்கு விசுவநாதர் நல்லதம்பியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு துந்தாவத்தை பிள்ளையார் கோவில் ஆதனம் மேற்கு வாரிகிட்டிணருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு வல்லிபுரம் பெண் தங்கம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள். அடங்கலிற் சொரியலாய் (1/4) நாலிலொருபங்கும்.

இவ்வாதனங்கள் துந்தாவத்தை. சித்திவிநாயகர் கோவிலுக்கு 15.05.2006ம் திகதி 5747ம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு சபா.ரவீந்திரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட தர்மநன்கொடை உறுதிப்படி சொந்தமானது.

03. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிபகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் மணிவீரபாகு தேவன் குறிச்சியிறை "துந்தாவத்தை" நில.பர 4 1/4. எல்லை கிழக்கு தெரு. வடக்கும் தெற்கும் குறித்த சித்திபிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனம்.மேற்கு எங்களுக்குரிய ஆதனம். இவ் வெல்லைக் குட்பட்டநிலம் கோவில் கட்டிடங்கள், கிணறு முதலியனயாவும்.

இவ்வாதனம் துந்தாவத்தை.சித்திவிநாயகர் கோவிலுக்கு 24.12.1953ம் திகதி 640ம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு சபாபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதிப்படி சொந்தமானது.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சி மேற்குபகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று

04. அல்வாய் மணிவீரபாகுதேவன் குறிச்சியிறை "துந்தாவத்தை" நில.பர 11 1/4 பனை வடலிகள் வேம்புகளும் எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு குறித்த சித்திவிநாயகர் கோயிற் காணியும் கதிரித்தம்ப கைம்பெண் சீரேவனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு சின்னையா கைம்பெண் சின்னப்பிள்ளை யம்மாவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்டவைகள் அடங்கலும்.

05. மேற்படியிறை "கொடுவாட்தெணி" நில.பர 120 மேற்படி நில.பர 29 தோட்டம் 2 எல்லை கிழக்கு ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு றோட்டு. மேற்கு முருகர் வல்லிபுரத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்.தெற்கு தெரு இந்தக் காணியில் கிழக்கரைவாசி நிலம் பனை, வடலிகள், தென்னைகள் கிணறுகளடங்கலில் சொரியலாய் பதினாறில் மூன்று பங்கில் நாலிலொரு பங்கும்

06. மேற்படியிறை "பழனியோடை" நில.பர 9 3/8 வீடு மேற்படி இறை "பழனியோடை" நில.பர 4 5/8 இதில் 1ம். 2ம் பிரிவில் வடக்குப்புறமாக நாலில் மூன்று பங்கு (3/4) நிலமும் 3ம் பிரிவில் வடகிழக்குப் புறமாக நாலிலொருபங்கும் (1/4) ஒரே துண்டாகவிருக்கிறது. இதற்கு கூடிய நிலப்பரப்பு 6, 3/16 பனைகளும் எல்லை கிழக்கு கந்தர் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரியஆதனம் வடக்கு சின்னையாகைம்பெண் சின்னப்பிள்ளையம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு கணபதிபிள்ளை செல்லப்பாவுக்கும் மறுபேருக்கும் உரியஆதனம். தெற்கு கதிர்காமர் பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

இவ்வாதனங்கள் சித்திவிநாயக சுவாமிக்கு 08.05.1904 ம் திகதி 9990 ம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு இ.ஆறுமுகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதிப்படி சொந்தமானது.
வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதிகட்டைவேலிக் கோவிற்பற்று.

07. அல்வாய் மணிவீரபாகுதேவன் குறிச்சியிறை "கலத்தொல்லை" நில.பர 27 3/4 இதில் தெற்குப் புறமாக நாலில் ஒரு பங்குக்கு நில.பர 6 15/16 கிணறும் எல்லை கிழக்கு கதிர்காமர் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு சுப்பிரமணியஐயர் சின்னச்சாமி ஐயருக்கும் மறுபேருக்குரிய ஆதனம். மேற்கு இராமன் சின்னனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு புதியான் ஆள்வானுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ் எல்லைக்கு உட்பட்டவைகள் முழுவதும் தென் மேற்கெல்லையிருக்கும் கிணற்றிற் சொரியலாய் நாலிலொருபங்கும்.

08.மேற்படி இறை "தளாய்" நில.பர 5 1/2 பனைகளும் எல்லை கிழக்கு கதிரித்தம்பி பொன்னை யாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு குறித்த சித்தி விநாயகப் பிள்ளையார் கோவிலாதனம். மேற்கு சுப்பர் கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு நாகன் தம்பனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ் எல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

09.மேற்படி இறை "வேசரியவத்தை" நில.பர 11 7/8 இதில் தென்கிழக்கு புறமாக நாலில் ஒருபங்கு நீக்கி மிகுதிக்கு நில.பர 8 29/32 பனைகளும் வடலிகளும் எல்லை கிழக்கு பின்னாற் காணுமாதனமும், வேலுப்பிள்ளை சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் வடக்கு குறித்த சித்திவிநாயகப் பிள்ளையார் கோவிலாதனமும், வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளைக்குரிய ஆதனமும், மேற்கு ஒழுங்கை தெற்கு ஒழுங்கையும் பின்னாற்காணும் ஆதனமும். இவ் எல்லைக்கு உட்பட்டவைகள் முழுவதும்.

10.மேற்படி தென்கிழக்கு புறமாக நாலிலொரு பங்குக்கு நில.பர 2 31/32 பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கும் மேற்கும் மேற்கூறிய 3ம் ஆதனம் தெற்கு ஒழுங்கை. இவ் எல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் இருபத்தேழில் நாலுபங்கும்.

இவ்வாதனங்கள் சின்னச்சாமிஐயா சின்னையாவுக்கு 06.07.1932ம் திகதி 11043ம் இலக்கத்தில் பிரசித்தநொத்தாரிசு க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட தர்மசாதனமும் றஸ்றி நியமனமும் உறுதிப்படி சொந்தமாக இருந்து காலஞ்சென்றவரின் முதுசமானது.

11. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் நீலக் குட்டியார் குறிச்சியிறை வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவு வடமராட்சி வடக்கு பிரதேச சபை, J/397 அல்வாய் வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட "கணிஞ்சாவத்தை" நில.பர 10குளி 4, $\frac{1}{2}$. இது தெற்குப்பக்கமாக நிலப்பரப்பு ஐந்துகுளி இரண்டேகால் இந்த நில.பர 5 குளி 2.1/4 க்கும் எல்லை கிழக்கு கதிரன் காங்கேசனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு சின்னத்துரை நாகம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு றோட்டு. தெற்கு கதிரன் கந்தனுக்கும்மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவையடங்கலும்.(பருத்தித்துறை C 56/ 36).

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி வடமராட்சி வடக்குபருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவு பருத்தித்துறை பிரதேச சபை J/397அல்வாய் வடமேற்கு கிராமசேவையாளர் பகுதிக்குட்பட்டகட்டைவேலிக்குட்பட்ட கட்டைவேலிக் கோயிற்பற்று

12.மேற்படிஅல்வாய் மழவராய குறிச்சியிறை "கொழுவன்தோட்டம்" இதுநிலஅளவையாளர் ஏ.கோவிந்தப்பிள்ளையால் 1966ம் ஆண்டு மாசி மாதம் 06 ம் திகதி 525ம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்டநீதிமன்றின் 3060ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் கடைசித் தீர்வையோடுஅணைக்கப்பட்ட படத்திற் கண்ட 3ம் இலக்கத்துண்டு நில.பர 01 குளி 02.24/32, இதற்கு எல்லை கிழக்கு குறித்த இலக்கப்படத்தில் கண்ட 2ம் இலக்கத்துண்டு. வடக்கு குறித்த இலக்கப்படத்தில் கண்ட 4ம் இலக்கத்துண்டு. மேற்கு ஒழுங்கை. தெற்கு கிட்டிணப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இதடங்கலும், அதற்குச் சேர்ந்தவைகள்அனைத்தும்.

13. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி வடமராட்சி வடக்குபருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவு பருத்தித்துறை பிரதேச சபை J/397அல்வாய் வடமேற்கு கிராம சேவையாளர் பகுதிக்குட்பட்ட கட்டைவேலிக்கோயிற்பற்று அல்வாய் மணிவீரவாகுதேவன் குறிச்சியிறை "கொடுவாட் தெணி" நில.பர 120 மேற்படி 26 மேற்படி தோட்டம் 3. இவைகளில் கிழக்கரைவாசியில் எட்டிலொருபங்குக்கு ஆட்சிப்படி நில.பர 10 பனைகள் வடலிகள் கிணறும்இதற்கெல்லை கிழக்கு சித்தன் ஆழ்வானுக்கும் மறுபேருக்குமுடையஆதனம். வடக்கு பொன்னையா ஆழ்வார்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையஆதனம். மேற்கு இராசதுரை பெண் அழகுமலருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.தெற்கு ஆறுமுகம் பெண்இரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவு பருத்தித்துறை பிரதேச சபை J/397 அல்வாய் வடமேற்கு கிராமசேவையாளர் பகுதிக்குட்பட்ட கட்டைவேலிக்கோயிற்பற்று

14.அல்வாய் மணிவீரவாகுதேவன் குறிச்சியிறை "வேட்டைவெளி" நில.பர 12, 5/8 இதற்கு எல்லை கிழக்கு பாஸ்கரசர்மா பெண் குலரத்தினத்துக்குரிய ஆதனம். வடக்கு வேலன் கிட்டிணனுக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். மேற்கு கையொழுங்கை. தெற்கு துந்தாவத்தை சித்திவிநாயகர் கோவிலுக்குரிய ஆதனம். இதடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகள் அனைத்தும்.

15.மேற்படி நீலக்குட்டியார் குறிச்சியிறை "இளையகுட்டிபுலம்" நிலபர 58 குளி 02. இதற்கு 1958ம் ஆண்டு சித்திரை மாதம் 16 ம் திகதி நிலஅளவையாளர் க.வேல்முருகுவால் 338ம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்டநீதிமன்றின் 4556 ம் இலக்கப் பிரிவிடல் வழக்கின் கடைசித் தீர்வையோடணைக்கப்பட்ட படத்தின்படி 19ம் இலக்கத்துண்டுக்கு நில.பர 02 குளி 5 1/6. இதற்கு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சிவயோகமலருக்குடைய ஆதனம். வடக்கு துந்தாவத்தை சித்திவிநாயக ருக்குடைய ஆதனம். மேற்கு குறித்தபடத்தில் கண்ட 22ம் இலக்கத்துண்டு. தெற்கு குறித்தபடத்தில் கண்ட 18ம் இலக்கத்துண்டு. இதடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளனைத்தும்.

16. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவு வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச சபை, J/397 அல்வாய் வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மணிவீரவாகுதேவன் குறிச்சியிறை "சந்திரத்தை" நில.பர 07. எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் மங்கையற்கரசிக்குடைய ஆதனம். வடக்கு ஆறுமுகம் இரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ஆழ்வான் மகள் தெய்வானைக்குடையதும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்

17. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதிகட்டை வேலிக் கோவிற்பற்று அல்வாய் மணிவீரவாகு தேவன் குறிச்சியிறை "பூவற்கரை" நில.பர 4 1/2 மேற்படி வீடு 1/2 மேற்படி நில.பர 4 1/2 அல்வாய் நீலக்குட்டியார் குறிச்சியிறை "கணிஞ்சாவத்தை" நில.பர 4 3/4 இவைகளில் தென்கிழக்குப்புறமாக காளிகோயிலுக்காக நில.பர ஒன்றை (1) நீக்கி மிகுதிக்கு நில.பர 13 குளி 7 1/2 இதற்கு எல்லை கிழக்கு தெருவும் காளிகோவிலுக்காக விடப்பட்ட நிலமும் வடக்கு எங்கள் முதலாம் பேருக்கும் மறுபேருக்குரிய ஆதனம் மேற்கு துரைராசா பெண் செல்வரத்தினத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் தெற்கு காளிகோவிலாதனமும் சின்னையா ஐயா சிவாசாமி ஐயருக்குமுரிய ஆதனமும் இதடங்கலும்,

18. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மணிவீரவாகுதேவன் குறிச்சியிறை "துந்தாவத்தை" நில.பர 23 7/8 இதில் வடகிழக்குப்புறமாக ஏழரைக் கோல் நீளமும், முக்கால் கோல் அகலமுங் கொண்ட நிலம் குளி 5 5/8 எல்லை கிழக்கு செல்லம்மா வயித்திலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு கதிர்காமத்தம்பி பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கும் தெற்கும் துந்தாவத்தை சித்திவிநாயகர் கோயில் ஆதனம். இவ்வெல்லைகுட்பட்டநிலமடங்கலும்.

19.வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக்கோவிற்பற்று அல்வாய் மணிவீரவாகுதேவன் குறிச்சியிறை, வேலர்மகள் வேலன் பெண் வேதியும் மறுபேரும்தோம்பு "தல்வளை" நில.பர 56 மேற்படி தோட்டம் 3. இதடங்கலிற் சொரியலாய் 77/630 பங்கும். இதற்கு நிந்தப்படுத்தி ஆட்சிப்பண்ணி வருகிறபடி 05.12.2007ம் திகதி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வே.க.பாலச்சந்திரன் அவர்களால் 2280ம் இலக்கத்தில் அளந்து வரைந்த நிலஅளவைப்படத்தின் படி விஸ்தீரணம் நிலப்பரப்பு ஐந்து குளி ஒன்று தசம் ஒன்று நான்கு (நில.பர 5 குளி 1.14) இதற்கு எல்லை கிழக்கு கந்தவனம் நடராசாவுக்கும் மறுபேருக்குரிய ஆதனம். வடக்கு கந்தசாமி பெண் இரத்தினத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு விஜயராசா பெண் அமல உற்பவனூர்த்து நாயகிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு தெரு. இதடங்கலும்,

20.வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மணிவீரபாகுதேவன் குறிச்சிறை "துந்தாவத்தை" நிலப்பரப்பு 13 1/2 எல்லை கிழக்கும் வடக்கும் றோட்டு, மேற்கு மகாலிங்கம் கங்காதரனும் மறுபேரின் ஆதனம், தெற்கு நடராசாலிங்கம் பெண் இந்திராதேவியின் ஆதனம். இதடங்கலும். (பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் காணி/18251 வழக்குக்குட்பட்டது.)

(11 தொடக்கம் 20 வரையான ஆதனங்கள் குத்தகைக்கு விடப்பட்ட துந்தாவத்தை சித்திவிநாயகர் கோயிலுக்குரிய ஆதனங்களாகும்),

நீதிமன்ற கட்டளைப்படி
கையொப்பமிடப்பட்டுள்ளது
பதிவாளர்
மாவட்டநீதிமன்றம்
பருத்தித்துறை
றபர் முத்திரை இடப்பட்டுள்ளது

வரைபு
கையொப்பமிடப்பட்டுள்ளது
மனுதாரரின்சட்டத்தரணி
றபர் முத்திரை இடப்பட்டுள்ளது

(C-3765)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 508
31.08.2025



# "ரணில் கைது எதிர்ப்பின் எதிரொலி!"



**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது உலக நாடுகளை மீண்டும் இலங்கையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது**

அபிமன்யு

தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவுக்குச் செல்வதற்காக 17 மில்லியனுக்கும் அதிகமான அரச பணத்தை செலவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 26ஆம் திகதி அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்ததாயினும் அவர் தொடர்ந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் இருந்து வீடு சென்றார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிணையில் விடுவிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றில் முந்நூறுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் பிரசன்னமாகியிருந்தனர்.

ரணிலுக்கு பிணை வழங்கக் கூடாது என அரசதரப்பு சட்டத்தரணிகள் வாதிட்டிருந்த போதிலும் அவரின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் என்று அவ்வாறு நடந்து கொள்வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்று கூறி எதிர்க்கட்சிகள் கடந்த 26ஆம் திகதி போராட்டத்திற்கு அழைப்பு விட்டிருந்தனர்.

எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள், ரணிலின் ஆதரவாளர்கள் கொழும்பு நீதிமன்றத்திற்கு அண்மையாக ஒன்றுகூடி ரணிலை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி போராட்டம் நடத்தியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா நரியை வீழ்த்த பன்றிகளால் ஒருநாளும் இயலாது எனக் கூறியமை பேசுபொருளாகியது.

அதாவது ரணில் விக்கிரமசிங்கவை "நரி" என்றும் தேசிய மக்கள் சக்தி அரசை "பன்றி" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தமை அரசதரப்பை கோபத்துக்குள்ளாகியருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை. நீதிமன்றை அண்மித்த பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ரணிலின் ஆதரவாளர்கள் "அநுர கோ கோம்" எனக் கோசமிட்டமை "கோட்டா கோ கம"வை நினைவுபடுத்துவதாய் அமைந்திருந்தது.

ரணில் கைது தொடர்பில் பேசிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க "யார் தவறு செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். சட்டத்திற்கு அப்பாற்பட்டு எவரும் இல்லை" என்று கூறியமை அரசாங்கம் ஊழலுக்கு எதிராக இன்னும் கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெளிவுப்படுத்தியிருந்தது.

ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டோர் ஒன்று கூடியிருந்தமை அரசியல் மட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாக ஜே.வி.பியின் தலைவர் ரில்வின் சில்வா "ரணிலுக்கு ஆதரவாகக் களம் இறங்கியவர்கள் அனைவரும் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்களே" அவர்கள் ரணிலுக்கு ஆதரவு தேடுவதனூடாக தங்களுக்கு ஆதரவு கோரியிருந்தார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை வைத்தியசாலையில் பார்வையிட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களிடம் பேசும் போது "எனக்கு 14 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. இயலுமெனின் என்னைக் கைது செய்து பார்க்கட்டும்" என இறுமாப்பாகப் பேசியிருப்பது நிச்சயம் அநுரவைச் சினப்படுத்தியிருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதற்காக எதிரணியினர் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் நோர்வேயில் இருந்து ஒரு குரல் ரணிலுக்கு ஆதரவாக எழுந்துள்ளது.

ஆம், அது வேறுயாருடையதுமில்லை. நோர்வேயின் முன்னாள் அமைச்சர், இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தையின் சமாதானத் தூதுவர், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது அவரின் ஆலோசகர் என பல்பரிமாணங்களைக் கொண்ட எரிக் சொல்ஹெய்ம் அவர்களே.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்ற காலத்தில் நோர்வேயின் அனுசரணையில் இவ்விருவருக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் பல தரப்புகளாக நடைபெற்றன.

குறித்த பேச்சுவார்த்தைக்கு சமாதானத் தூதுவராக செயற்பட்டவர் எரிக் சொல்ஹெய்ம். இவர் மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையும் மரியாதையும் வைத்திருந்தனர்.

அந்தக் காலங்களில் எரிக் சொல்ஹெய்ம் உலக நாடுகளில் பிரபல்யமாகத் திகழ்ந்தார். அவர் எதைச் சொன்னாலும் அது சர்வதேச செய்தியாக இருந்தது.

இவை அனைத்தும் அவர் சமாதானத் தூதுவராகச் செயற்பட்டதன் விளைவே.

குறித்த பேச்சுவார்த்தைக் காலமே தமிழீழ விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்குக் காரணம் எனவும் அதை ரணில் விக்கிரமசிங்கவே மேற்கொண்டார் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

"தூதுவர்" என்பவர் நடுநிலை சார்ந்தவராகவே இருக்க வேண்டும். ஆயினும் சமாதானத் தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரினால் தனது ஆலோசகராக நியமிக்கப்பட, அதை எரிக் சொல்ஹெய்ம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

இது எரிக் சொல்ஹெய்ம் மீது தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

நடுவுநிலையுடன் இருக்க வேண்டியவர் இவ்வாறு நடந்து கொண்டமை, விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியில் இவருக்கும் பங்கிருக்குமோ என்ற ஐயத்தைத் தோற்றுவித்தது.

இப்போது அவர் தனது X தளத்தில் ரணில் விக்கிரமசிங்க சிறந்த மனிதர். அவர் வீழ்ந்து கிடந்த இந்த நாட்டைத் தூக்கி நிறுத்தியவர்.

அரசியல் பழிவாங்கல்களுக்காக ஒரு நல்ல மனிதன் பாதிக்கப்படக்கூடாது. எனவே ரணிலை அரசு விடுதலை செய்ய வேண்டும் எனப் பதிவிட்டிருக்கிறார்.

குறித்த விடயம் உலக அரசியலில் பேசுபொருளாகியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசு ஊழல் ஒழிப்பு என்பதையே தனது பிரதான கருப்பொருளாகக் கொண்டு பிரசாரத்தில் ஈடுபட்டது.

இந்த நாட்டின் மக்கள் அனைவரும் அதை ஏற்றே அவர்களுக்கு வாக்களித்திருக்கின்றனர். எனவே ஊழல் புரிந்தவர்களை பாதுகாக்க நிலைப்பது மகா தவறு.

தவிர, சாதாரண பாமர மக்களுக்கு ஒரு சட்டமும் பதவி, புகழ் உள்ளவர்களுக்கு வேறொரு சட்டம் என்ற நிலையை இனி இந்த நாடு எதிர்கொள்ளக்கூடாது.

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்ததை விபரிக்கும் வகையில் கேலிச்சித்திரம் ஒன்று சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.

அதாவது, நீதிதேவதை கையில் தராசுடன் வைத்தியசாலையின் ICU பகுதிக்கு வந்து அதன் சாளரத்தினூடாக உள்ளே பார்ப்பது போல அந்தக் கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்தது.

இதனூடாக சாதாரண பாமரருக்கும் பதவியுடையவர்களுக்கும் சட்டம் வேறு மாதிரி செயற்படுகிறதோ என்ற கோணத்தைத் தோற்றுவித்திருந்தது.

ஊழல் என்பது முதுகெலும்பில் தொற்றிய புற்றுநோய் போன்றது. அதை இல்லாதொழிப்பது மிக மிகக் கடினமானது.

அந்தக் கடின பணியை அரசு கையில் எடுத்திருக்கின்றது. எதிரணிகளின் ஒன்றிணைந்த சூழ்ச்சிகளை மீறி ஊழலற்ற நாட்டை உருவாக்குவது அவ்வளவு சுலபமான செயல் அல்ல.

நாட்டு மக்களின் ஆணை எதுவோ அதை அவ்வாறே செய்து முடிக்க வேண்டும். அப்போதே வாக்குறுதிகள் நிறைவேறும். **Welcome to Clean Sri Lanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற,அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாணக் கோட்டையில இருந்த இராணுவத்தை மீட்பதற்காக ஊர்காவற்றுறை ஊடாக 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி இராணுவம் மண்டைதீவைக் கைப்பற்றியது.

இந்த இராணுவ நடவடிக்கையால் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 72 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இதில் நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவர்.

அந்த இராணுவ நடவடிக்கை நடந்து 35 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன.

அன்று உயிரிழந்த எங்கள் உறவுகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, நாளை செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெற் மைதானத்திற்கு அடிக்கல் நாட்டவுள்ளார்.

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெற் மைதானம் அமைவது நல்ல காரியம்.

எனினும் சர்வதேச கிரிக்கெற் மைதானத்தால மண்டைதீவு மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மை, அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதி வாய்ப்புக்கள் என்ன? என்பதை நாம் பார்க்க வேணும்.

**மூப்பர்:-** மண்டைதீவு மக்களுக்கு ஒண்டும் கிடைக்காது.


இப்ப சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைய இருக்கிற இடத்தை வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டினம்.

அதிலும் வேலணை பிரதேச செயலகத்தில இருந்த பிரதேச செயலர் ஒருவர் அரச காணியை குத்தகைக்குக் கொடுத்து மண்டைதீவு மக்களின்ர தலையில மண்ணைக் கொட்டிப் போட்டார் எண்டு மண்டைதீவில ஒரே கதை.

**கங்காணி:-** பணம் பாதாளம் வரை பாயும் பாருங்கோ.

ஆனாலும் அரச காணிகளைக் குத்தகைக்கு வழங்கிறதாக இருந்தால் முதலில அந்தக் காணி அமைந்துள்ள ஊர் மக்களின்ர கருத்தை அறிய வேணும். அது நேர்மையான நிர்வாகிக்கு அழகு.

இதை விட்டிட்டுத் தங்களுக்கு அதிகாரம் இருக்குது எண்ட மமதையில, அதிகாரிகள் எழுந்த மானமாக நடந்து கொண்டால், அது அவர்களுக்கும் ஈனமாகத் தான் முடியும்.



## மண்டைதீவு மக்களுக்கு நன்மை ஏதும் உண்டோ?

இவ்வாறு கங்காணி கூற, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி சந்நிதியானின்ர ஆலயத்தில 111 தம்பதிகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது எண்டு அறிந்தன்.

தனி ஒருவர் அரைப் பவுண் பொற்றாலியை அன்பளிப்பாகக் கொடுத்து அந்தத் திருமணங்களை நிறைவேற்றி வைத்துள்ளார்.

உண்மையில அந்த நல்லுள்ளம் படைத்த பரோபகாரிக்கு எங்கட வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறம்.

இவ்வாறு சாத்திரியார் கூற, அந்தப் பரோபகாரியை வாழ்த்துறது கட்டாயம் தான். ஆனால் ... என்று கூறிய சிறாப்பர் கனகசபை அதை முழுமைப்படுத்தாமல் அமைதியாகினார்.

**பண்டிதர்:-** என்ன சிறாப்பர் ஐயா! ஏதோ சொல்லவந்திட்டு அதை இடையில நிறுத்திப் போட்டியள். சொல்ல வந்ததைச் சொல்லி முடியுங்கள்.

**சிறாப்பர்:-** 111 தம்பதிகளுக்கு தாலி, கூறை, பட்டுவேட்டி என்பனவற்றை அன்பளிப்பாக வழங்கி ஒரு நல்ல கைங்கரியத்தை அந்த பரோபகாரி செய்துள்ளார்.

ஆனால் புதுமணத் தம்பதிகளில சில மணப் பெண்கள் ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதிகமாகக் காசைச் செலவிட்டு, பியூட்டி பாலருக்குச் சென்று மேக்கப் செய்தவியள் எண்டு அறிந்த போது தான் வேதனையாக இருந்தது.

**பண்டிதர்:-** அட நாசமறுப்பு அப்படியும் நடந்ததோ.

**விதானையார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். இந்தியாவில இருந்து சாறி உடுப்பது எப்படி எண்டு சாறி கட்டிக்காட்டுவதற்கு எங்கட யாழ்ப்பாணத்திற்கு ஆள் வருகுது.

சாறிகட்டி விடுறதுக்கு ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா கட்டணமாக அறவிடப்படுகுது எண்டால் பாருங்களன்.

**கங்காணி:-** அட, சங்கதி அப்படியோ. அது தான் இங்க இருக்கிற பியூட்டி பார்லர் அமைப்புக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டவியள் போல.

**வாத்தியார்:-** ஏன்? இவையளும் இலட்சக் கணக்கில தானே காசு வாங்குகினம்.

இஞ்ச இருக்கிற அலங்கார வடிவமைப்பாளர்கள் நியாயமான கட்டணத்தை வாங்கினால் ஏனையவர்கள் இங்க வந்து நுழைய மாட்டினம்.

இதைவிட்டிட்டு மேக்கப் செய்ய எங்கட ஆட்கள் எல்லை கடந்து காசை வாங்கினால், தமிழகத்தில இருந்து அழகுக் கலை நிபுணர்கள் எண்ட பெயரில பலரும் இங்கு வந்து போவினம்.


பொதுவில தமிழகம், இந்தியா, வெளிநாடு எண்டால் எங்கட ஆட்கள் அதில நாட்டம் கொள்ளுவது வழக்கம் தானே!

ஆகையால யாராக இருந்தாலும் நியாயமான கட்டணத்தோட தங்கட தொழில் முயற்சிகளை மேற்கொண்டால் அந்தத் தொழில் முயற்சி நிண்டு நிலைக்கும் என்பது தான் உண்மை.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கச்சதீவை மீட்போம் என்கிறாரே நடிகர் விஜய்?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்



மழை நீரைத் தேக்கி வைப்பதன் மூலம் நிலத் தடிநீரைத் தேக்கிவைக்கலாமல்லவா வியாசரே?

**விவாகரத்துப் பெற்ற மனைவிக்கு படிக் காசு கட்டச் சொல்கிறார்கள். எத்தனை படிக்காசு கட்ட வேண்டும் வியாசரே?**

தவராஜன்- கொற்றாவத்தை

காத்தவராயன் கூத்தில் களுவேறும் காத்தவராயன் நிலை போல, அம்மா ஓராம்படி ஏறிவிட்டேன் பெற்றவளே தாயே. எனக்கு உடம்பெல்லாம் வலிக்குதண உத்தமியே தாயே.அம்மா ஈராம்படி ஏறிவிட்டேன் பெற்ற வளே தாயே! எனக்கு ஈரக் குலை நடுங் குதண உத்தமியே தாயே.

அம்மா மூன்றாம்படி ஏறிவிட்டேன் பெற்ற வளே தாயே! எனக்கு முதுகெல்லாம் வலிக் குதண உத்தமியே தாயே!

இப்போது வரை மூன்று படிதானே ஏறி யிருக்கிறீர்கள். இன்னும் ஏழுபடி இருக்கிறது. அது தான் உங்களுக்கு ஏழரை போல.

**கச்சதீவை மீட்போம் என்கிறாரே நடிகர் விஜய்?**

கிஷோர்- நாவாந்துறை

எமது கடல் வளங்களை இந்திய மீன வர்களின் ரோலர் படகுகள் அள்ளிச் சென் றால் கூடப் பரவாயில்லை, அழித்துச் செல் கிறது.அள்ளிச் செல்வதற்கும் அழித்துச் செல்வதற்கும் வித்தியாசம் தெரியாமல் கச்சதீவை மீட்க வேண்டும் என்று கோருவது வேடிக்கைக்குரியது.

முதலில் இந்திய மீனவர்களின் மீன்பிடி முறை தொடர்பில் ஆய்வு செய்து அதன் முடிவைப் பெற்றுவிட்டு எமது கடல் எல் லைக்குள் வருவது பற்றியும் எமது வளத்தை அள்ளுவது, அழிப்பது பற்றியும் பேசலாமே விஜய் அண்ணா!

**நாட்டில் அடுத்தடுத்து ஊழல்வாதிகள் பலர் உள்ளே போவார்கள் என்கிறதே அரசாங்கம்?**

சிவம்- வதிரி

அனுரகுமார திசாநாயக்க எதைச் சொல்லி ஆட்சிக்கு வந்தாரோ அதைச் செய் கிறார். இதனால் நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியே.

மக்கள் பணத்தை ஊழல் செய்தவர்களை மாலை போட்டு மரியாதை செய்ய வேண்டும் என்று நினைப்பது எவ்வளவு கொடுமைத்தனம்.

மக்கள் கஞ்சிக்கே வழியின்றி அல்லல்பட்ட போது மக்கள் பணத்தில் வெளிநாட்டுச் சுற்று லாவுக்குச் சென்றவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற குரல்களைக் கேட்கும் போது அடடா இவ்வளவு திருடர்கள் இன்னும் வெளியே இருக்கிறார்களா என்று எண்ணத் தோன்று கிறது.

அனுர அரசின் வேட்டை தொடரட்டும்.

**நாளை என்று இருப்பதா? இன்று என்றே முடிப்பதா சரியானது வியாசரே?**

ரோஜா- ஆசைப்பிள்ளைஏத்தம்

நாட்டு மன்னன் ஒருவனுக்கு ஓலை வருகிறது. அயல் நாட்டு மன்னன் தங்கள் நாட்டின் மீது படையெடுக்கிறான் என.

அவன் படைகளுடன் எமது நாட்டு எல்லைக் குவர ஒரு நாள் ஆகும். நாளை படைகளைத் தயார் செய்யலாம் என இருந்துவிட்டான் மன் னன்.இரவோடு இரவாக அரண்மனையை முற்றுகையிட்டது அயல் நாட்டுப்படை.

இன்று செய்ய வேண்டிய வேலையை நாளைக்கு செய்யலாம் என்று வைப்பது வியாதி என்றே கூறலாம்.இன்று செய்ய வேண்டிய வேலையை நாளை செய்வதும் தவறு. அதே போல நாளை செய்ய வேண்டிய வேலையை இன்று செய்வதும் தவறு.




**செம்மணிப்புதைகுழியை ஜனாதிபதி நேர டியாகப் பார்வையிடுவாராமே வியாசரே?**

தர்மதன்- மாதகல்

சில விடயங்களில் அவசரப்படாமல் அமைதியாய் இருப்பது எமக்குப் பலத்தைத் தரும்.ஐ.நா. ஆணையாளர் செம்மணிக்கு வந்த போது அரச தரப்பினரை உள்ளே வர விடாமல் விரட்டியது முறையான செயல் அல்ல.

இப்போது ஜனாதிபதி வருகிறார் என்றால் நிச்சயம் அது எமக்குப் பலமான விடயமே.

இதைவிடுத்து சிலர் தமது அரசியல் ஆதா யத்துக்காக பொது வெளியில் நின்று எதிர்ப்பது ஒட்டு மொத்த தமிழினத்துக்கும் துரோகம் இழை க்கும் செயல்.

எதிர்ப்பு அரசியல் என்பது வேறு. எதற்கும் எதிர்ப்பது என்பது வேறு என்பதை எம்மவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

**மதமாற்றம் பற்றி உங்கள் கருத்து என்ன வியாசரே?**

ஜெயக்குமார்- யாழ்ப்பாணம்

இந்த உலகில் வாழும் ஒவ்வொரு மனி தனுக்கும் தனக்குப்பிடித்த மதத்தைப் பின்பற்ற, வழிபட உரிமையுண்டு. இதை மறுக்க இயலாது.

ஆயினும் வீடு வீடாகச் சென்று அவர்களின் விருப்பமின்றி புத்தகங்களை, துண்டுப் பிரசு ரங்களைத் திணிப்பது,வேறு மதங்களை இழிவு படுத்தி தமது மதம் சார்ந்து பேசுவது ஒரு நாளும் ஏற்புடையதல்ல.

இந்த விடயத்தில் சட்டங்கள் இயற்றுவது சரியானதாய் அமையும். ஏனென்றால் சிலர் அனுதாபங்களை, அன்பளிப்புக்களைக் காட்டி மதமாற்றத்தில் ஈடுபடுகின்றனர்.

இது அடிப்படை மனித உரிமை மீறல் என்பதே உண்மையானது.

**மழை நீரைத் தேக்கி வைப்பதன் மூலம் நிலத்தடி நீரைத் தேக்கி வைக்கலாமல்லவா வியாசரே?**

சுரேசன்- பத்தமேனி

தூய நிலத்தடி நீரைக் கொண்டிருந்த வடக்கின் நிலத்தடி நீரில் மலம் கலந்து விட்டது. மாசுபட்டுவிட்டது என்று கதைகட்டிய தண்ணீர் கம்பனிகள்.தங்கள் தண்ணீர் போத்தலை விற்று கோடி கோடியாய் உழைத்துக் கொண்டி ருக்கின்றனர்.

தவிர,மூலைக்கு மூலை பில்ரர் வோட்டர் என்றும் லீற்றர் 4 ரூபா என்றும் புது பிஸ்னஸ் ஆரம்பித்துவிட்டார்கள்.

முதலில் இந்த தண்ணீர் மாபியாக்களை ஒழித்துக் கட்ட வேண்டும்.

எமது வளமான நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டும். மழை நீரை சேமித்தாலே போதும். எமது தேசம் ஒரு நாளும் வறண்டு போகாது.

**ரணில் விக்கிரமசிங்க கைதுக்கு எதிர்க் கட்சிகள் கூப்பாடு போடுகின்றனரே?**

சுதன் -குப்பிளான்

முதுகில் புண் இருப்பவன் தான் காடு புகப் பயப்பிடுவான் என்றொரு பழமொழியுண்டு.

அதை நூறு விகிதம் உண்மையாக்கியிருக் கிறது ரணில் அவர்களின் கைதும் அதைத் தொடர்ந்து அதை எதிர்த்தவர்களின் நிலை யும்.

ரணில் விக்கிரமசிங்கவின் கைதை எதிர்ப்ப வர்கள் அனைவரும் ஊழல்வாதிகளே. அத னால்தான் அவர்கள் அவரின் கைதை எதிர்க் கிறார்கள் என ஜே.வி.பியின் தலைவர் ரில்வின் சில்வா கூறியிருப்பது நூறுவிகிதம் உண்மை யானது.

மக்கள் பணத்தைச் சுரண்டியவர்களை சுதந்திரமாக நடமாட விட வேண்டும் என்று கோருவது ஏற்புடைய விடயமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆர் போல், சாதிப்பாரா விஜய்?



இன்று தமிழ்நாட்டு அரசியலில் பரபரப்பாகப் பேசப்படுபவர் நடிகர் விஜய். அவர் தமிழ்நாடு வெற்றிக்கழகம் (த.வெ.க) கட்சி ஆரம்பித்து, கட்சியின் இரண்டாவது மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தி முடித்திருக்கின்றார். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜனத்திரள் அப்படி. கொதிக்கும் வெய்யிலை பொருட்படுத்தாமல் காலையிலிருந்தே மாநாட்டுக்கு வந்த பெருங் கூட்டம். இதனால் பட்டிதொட்டி எங்கும் பட்டிமன்றம் போட்டு "விஜய் முதலமைச்சர் ஆவாரா, ஆகமாட்டாரா" என்று விவாதிக்கும் அளவிற்கு தமிழ்நாட்டு அரசியல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மேலும் அநேகமான எல்லா பெரிய கட்சிகளும் விஜயை தாக்குவதிலிருந்து, விஜயின் அரசியல் வளர்ச்சி தெரிகின்றது. பெரிய கட்சிகள் தாக்குவது கூட அவருக்கு விளம்பர வளர்ச்சி தான். ஆனால் இங்கே நான் சொல்ல வருவது, தேர்தலில் போட்டியிட்டு, முதலமைச்சராக வெல்லுவரா என்றால் சந்தேகம் என்பது தான்.

நடிகர் விஜய் ஒரு ஆக்ஷன் ஹீரோ. இருநூறு கோடிக்கு மேல் சம்பளம் வாங்கும் பெரிய நடிகர். இருநூறு கோடி சம்பளத்தையும் விட்டுவிட்டு, மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று, அரசியலுக்கு வந்தது பாராட்டப்பட வேண்டியது. ஆனால் நடிகர் எம்.ஜி.ஆரைப் போல் வெற்றி பெற்று முதலமைச்சர் ஆவாரா விஜய் என்பதற்கு, நடிகர்களாக இருந்து அரசியல் கட்சி ஆரம்பித்து தேர்தலை சந்தித்தவர்கள் பற்றி கொஞ்சம் சுருக்கமாக பார்ப்பது நல்லது.

முதலில் தேர்தலில் நின்று தோற்ற நடிகர்கள் பற்றி சுருக்கமாக பார்த்து விட்டு, வெற்றி பெற்ற எம்.ஜி.ஆர் பற்றி கொஞ்சம் விரிவாக பார்க்கலாம்.

**நடிகர் விஜயகாந்** இவரை எடுத்துக் கொண்டால் இவர் தனது திரைப்படங்களினூடாக இந்திய தேசிய ஒருமைப்பாடு கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தவர். காஸ்மீர் தீவிரவாதிகள் இவரது பிரதான இலக்கு, புரட்சிகரமான பல திரைப்படங்களில் நடித்து, புரட்சிக் கலைஞர் என்று பெயர் எடுத்தவர். படத்தில் மக்களுக்கான நல்ல கருத்துக்கள் கூறினாலும் புரட்சிகரமான கருத்துள்ள சினிமாப் பாடல்களில் கவனம் செலுத்தியது குறைவு. படத்தில் கதைக் கேற்ப ஒன்று இரண்டு பாட்டு இடம்பெற்றிருக்கும். தன்னுடைய மன்றத்தினூடாகவும், தனிப்பட்ட முறையிலும் அதிகளவு உதவிகள் செய்தவர். கட்சி ஆரம்பித்து தனித்து போட்டியிட்டு முதலமைச்சர் ஆகாமல் தோல்வியடைந்தார்.

அடுத்தவர் **சிவாஜிகணேசன்** இவர் தந்தை பெரியார், காமராஜர், அண்ணாத்துரை, கருணாநிதி போன்ற பெரும் அரசியல் தலைவர்களோடு நெருங்கி பழகிய அனுபவம் உள்ளவர்.

சினிமாவில் கலையை முதன்மைப்படுத்தியவர். அரசியலை முன்னிலைப்படுத்தியது குறைவு. தன்னுடைய மன்றங்களினூடாக உதவிகள் செய்ததை விட, தனிப்பட்ட முறையில் நிறைய உதவிகள் செய்தவர். வசந்தம் T.V யில் பழைய பாடல்களை தொகுத்து வழங்கும் நிகழ்ச்சியில் அந்தத் தொகுப்பாளர் கூறியிருந்தார், "தமிழ்நாட்டில் நடிகர் திலகம் சிவாஜிகணேசனும், நடிகையர் திலகம் சாவித்திரி அவர்களும் மக்களுக்கு உதவிகள் செய்ததைப் போல் வேறு யாரும் உதவிகள் செய்ததில்லை. ஆனால் அவர்கள் செய்த உதவிகள் வெளிப்படுத்தப்படாமல் பிரச்சாரப்படுத்தப்படாமல் உதவி செய்தவர்கள்" என்று கூறினார். இப்படி உதவிகள் செய்த சிவாஜிகணேசனும் தனிக்கட்சி ஆரம்பித்தார். தேர்தலில் போட்டியிட்டார். முதலமைச்சராக முடியவில்லை.

மற்றவர் **கமல்ஹாசன்**. இவர் ஒரு அற்புதமான கலைஞர். கலை கலைக்காகவே என்று வித்தியாசமான பல கலை நுட்பங்களை உட்புகுத்தி சினிமாவின் ஊடாக வெளிப்படுத்துபவர். நடிகர்களுக்கான ரசிகர்கள் கணிப்பீட்டில் முதலிடம் சூப்பர் ஸ்ரார் ரஜனிகாந். இரண்டாம் இடத்தில் இருவர். ஒருவர் விஜய், மற்றவர் கமல்ஹாசன். இப்படி விஜய்க்கு சமமாக ரசிகர்கள் இருந்தும், தனிக்கட்சி ஆரம்பித்த கமல்ஹாசனால் இடைத்தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை.

இன்னொருவர் **சீமான்**. இவர் சினிமாவில் பல பரிமாணங்களைக் கொண்டவர். சுத்தமான தமிழ்க் கொள்கை. தன்னுடைய பிரச்சாரத்தில் மக்களுக்கான நல்ல திட்டங்களை வெளிப்படுத்தி வருகின்றார். தனிகட்சி ஆரம்பித்து தனித்து போட்டியிட்டு வருகின்றார். வெல்லவில்லை, வாக்கு வீதத்தில் படிப்படியாக வளர்ச்சி காணப்படுகின்றது. இதேபோன்று நெப்போலியன், T.ராஜேந்தர், சரத்குமார், K.பாக்கியராஜ் போன்றவர்களும் தனிக்கட்சி ஆரம்பித்து செயற்பட்ட நடிகர்கள். ஒருவராலும் முடியவில்லை.

இனி நாம் எம்.ஜி.ஆரிடம் வருவோம். எம்.ஜி.ஆர் மிக வும் வறுமையான வாழ்க்கை வாழ்ந்தவர். தன்னுடைய சகோதரர்களையும் பட்டினியின் கொடுமைக்கு பறி கொடுத்தவர். அதனால் கஷ்டப் பட்ட மக்கள் நிலைப்பற்றி நன்கறிந்தவர். தன்னுடைய திரைப்படங்களிலும் சரி, சினிமாப் பாடல்களிலும் சரி, தன்னுடைய முற்போக்கான இடதுசாரி கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தவர். அவருடைய பிரதான நோக்கம் நடிப்பல்ல, அரசியல். தன்னுடைய ரசிகர் மன்றங்களை ஸ்தாபன ரீதியாக வழிநடத்தி மக்களுக்கான உதவிகள் செய்து கொடை வள்ளல் என்று பெயரெடுத்தவர். திரைக்கதையாக இருந்தாலும் சரி பாடல்களாக இருந்தாலும் சரி வேறு எந்த செயற்பாடாக இருந்தாலும் சரி மக்களுக்கு இலகுவாக சென்றடைய வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருப்பார். உதாரணத்திற்கு தான் ஒரு கேரள மலையாள மொழியைச் சேர்ந்தவனாக இருந்தும், தமிழ்நாட்டு மக்கள் மனதிலே தான் ஒரு தமிழன் என்ற எண்ணத்தை-நினைப்பை ஏற்படுத்துவதில் கவனமாக செயற்பட்டு வெற்றி பெற்றவர்.

மேலும் பெரியார், அறிஞர் அண்ணா, கருணாநிதி போன்ற அனுபவமுள்ள அரசியல்தலைவர்களோடு ஒன்றுபட்டு செயற்பட்டவர். தனிக்கட்சி ஆரம்பித்தவுடன் தன்னுடைய செல்வாக்கை கணிப்பதற்கு, இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர்தான் முதலமைச்சராக போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார். அவருடைய ரசிகர்களிடமும் மக்களிடமும் செல்வாக்கு பெறுவதற்கு அவருடைய கொள்கையை விளக்கும் தத்துவப் பாடல்களே மிகவும் பிரதானமான காரணமாகும்.

இனி நாம் விஜயிடம் வருவோம். முப்பந்தைந்து வயதிற் குட்பட்ட ரசிகர்கள் பட்டாளம். அரசியல் முதிர்ச்சி கொண்ட அனுபவ தலைவர்களோடு நெருங்கி செயற்பட்டது குறைவு. அரசியல் கருத்தரங்குகள், ஆய்வுகள், மேடைப் பேச்சுகள் போன்ற எதிலுமே கலந்து கொள்ளாதவர், கலந்து கொள்வதற்கு நேரமில்லாமல் சினிமாவிற்குள்ளிருந்து விட்டு திடீரென அரசியலுக்கு வந்தவர். தி.மு.க, பா.ஜ.க எதிர்ப்புதான் ஒரே குறி. மதசார்பின்மை கொள்கை மக்கள் நலன் சார்ந்த வித்தியாசமான புதுமையான எந்த கொள்கையும் இல்லை. அவரோடு பக்கத்தில் இருப்பவர்கள் யாராவது அரசியல் அனுபவமுள்ளவர்கள் இருக்கின்றார்களா என்றால் அதுவும் சந்தேகமே! வயதிலும் முதலமைச்சர் பதவிக்கு பக்குவமற்றவர்.

ஸ்தாபன ரீதியிலான கட்டமைப்புக்களோ நிர்வாக செயற்பாடுகளோ, அல்லது மக்களிடம் சென்று, மக்களுடைய குணம், குறை நிலையறிந்து அதற்கேற்ப செயலாற்றக்கூடிய அனுபவமுள்ள தொண்டர்களோ இல்லை.

இப்படி எந்த தகுதியும் இல்லாமல் வெறும் இரசிகர்கள் கூட்டத்தை வைத்துக்கொண்டு தேர்தலில் நின்று முதலமைச்சர் ஆவது எப்படி?

தேர்தல் நடப்பதற்கு இருக்கின்ற சில மாதங்களில், விஜயின் நடவடிக்கைகள் செயற்பாடுகள் எப்படி இருக்கப்போகின்றது என்பதைப் பொறுத்துத்தான் விஜயின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. இது சினிமா இல்லையே வினாடிகள்..., நிமிடங்கள்..., மணித்தியாலங்கள் இருக்கின்றது என்று பஞ் வசனம் பேசி இறுதியில் வெற்றி பெறுவதற்கு...?

சாந்தையூரிவன்
தி.ராம்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகச் சிறிய நாடு




உலகின் மிகச் சிறிய நாடு என்று சொன்னால் உடனே பலருக்கும் வாடிகன் சிட்டி தான் நினைவிற்கு வரும். ஆனால் வாடிகன் சிட்டியைவிட சிறிய நாடு ஒன்று உள்ளது என்பது பலருக்கும் தெரியாது!

நடுக்கடலில் அமைந்திருக்கும் இந்த நாடு குறித்து தெரிந்துகொள்ளலாம்.

இங்கிலாந்தின் ஃபோல்க் கடற்கரையிலிருந்து 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஒரு மைக்ரோ நேஷனாக இருப்பதுதான் சீலாண்ட். இந்த நாட்டின் மக்கள் தொகை வெறும் 27 பேர் தான் எனக் கூறப்படுகிறது.

1942ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மன் படைகளிடமிருந்து தங்களை காப்பாற்றுவதற்காக இங்கிலாந்தால் ஒரு தளம் கட்டப்பட்டது.

இந்தத் தளம் தான் ஒரு நாடாக உருவாகியுள்ளது. ஆம், படித்தது சரிதான்! 1967ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முன்னாள் இராணுவ வீரர் ராய் பேட்ஸ் என்பவர் ஒரு ரேடியோவை தொடங்க நினைத்தார்.

ஆனால் அங்கு பிபிசி தவிர மற்றொரு ரேடியோவை தொடங்குவது சட்டவிரோதமாக பார்க்கப்பட்டதால், இந்தக் கடலின் நடுவே இருக்கும் இராணுவத் தளத்திற்கு வந்தார் ராய் பேட்ஸ்.

ஒரு ரேடியோ ஸ்டேஷனுக்கு பதிலாக ஒரு நாட்டையே உருவாக்கினார் ராய் பேட்ஸ். இந்த இடத்திற்கு சீலாண்ட் எனப் பெயர் வைத்து இதனை தனி நாடாக அறிவித்தார்.

இதற்கான தனி பாஸ்போர்ட், ஸ்டாம்ப், கரன்சி, கொடி ஆகியவற்றை உருவாக்கினார். என்னதான் கொடி, கரன்சி, அரசு ஆகியவை இருந்தாலும் சீலாண்ட் இறையாண்மை கொண்ட தனி நாடாக யாராலும் அங்கீகரிக்கப்படவில்லை.

டச்சு இராணுவ அதிகாரிகள், பிரிட்டிஷ் காவல்துறையினர் எனப் பலர் அந்த இடத்தை சோதனை செய்து கைப்பற்ற முயன்றனர். ஆனால் அவர்களால் முடியவில்லை.

ராய் பேட்ஸின் இரு மகன்கள் தான் சீலாண்ட், நாட்டின் இளவரசர்களாக உள்ளனர். இவர்கள் இருவரும் தங்கள் நாடு அங்கீகரிக்கப்படும் என்று நினைக்கிறார்கள். ஆனால் எதிர்காலத்தில் இந்தப் பகுதி மீண்டும் கைப்பற்றப்படலாம் அல்லது கடல் சீற்றத்தால் இடிந்து போகலாம்.

இப்படிப் பல சம்பவங்கள் நடந்திருக்கும். இந்த சீலாண்ட் நாட்டை இன்று சுற்றுலாப் பயணிகள் சென்று பார்த்து வருகின்றனர்.




# ஆடம்பர பிறந்தநாள் கொண்டாட்டங்கள் அவசியமா?

**பேராண்டி...**

உன்ர பன்னிரெண்டாவது பிறந்தநாளை சொந்தக்காரங்களுக்கெல்லாம் சொல்லி விமர்சையாகக் கொண்டாடுவம் எண்டு கொம்மா சொல்ல "எனக்கு பிறந்தநாள் கொண்டாட வேண்டாம். அது வீண் செலவு. பிறந்தநாளுக்குச் செலவளிக்கிற காசை கஷ்ரப்பட்ட ஆக்களுக்கு உணவுப்பொருட்கள், படிக்கிற பிள்ளைகளுக்கு கொப்பி, புத்தகம் வாங்கிக் கொடுப்பம்" எண்டு சொன்னனியாம் எண்டு கொம்மா சொன்னவள்.

உன்ர பெருந்தன்மையைப் பாக்க உன்ர தாத்தா இல்லையெண்டு நினைக்க கஷ்ரமா இருந்தாலும் அவர் சொர்க்கத்திலை இருந்து உன்னை ஆசீர்வதிப்பார்.

பேராண்டி! எங்கடயாக்கள் செய்யிற ஆடம்பரச் செலவுகளை நினைச்சால் தலை சுத்தும். சிலரிட்டை சேமிப்புக் காசே இருக்காது. கடன் வேண்டி தேவை செய்வினம். இது ஒருநாளும் சரியான நடைமுறையில்லை.

உலகத்துப் பத்துப் பணக்காரருக்குள்ள ஒருவரா இருக்கின்ற அம்பானியின்ர மகனின்ர கலியாண வீட்டுச் செலவு, அவரின்ர சொத்திலை இருந்து ஒரு சதவிகிதம்தான் செலவானதாம்.

ஆனால் எங்கடயாக்களிட்டை சேமிப்பிலை காசே இருக்காது எண்டால், நிலை; காலம் முழுக்க கடன் கட்டுறதாத்தானே இருக்கும்.

இப்ப எங்களின்ர கொஞ்சப் பேர் கஷ்ரப்பட்டவைக்கு உதவி செய்யிறமெண்டு கமராக்களையும் தூக்கிக்கொண்டு திரியினம்.

"உள்ளங்கையாலை குடுக்கிறது புறங்கையுக்குத் தெரியக்கூடாது" எண்டொரு பழமொழி இருக்குது.

ஆனால் சிலர் கிள்ளிக் கொடுத்திட்டு அள்ளிக் கொடுத்ததாய் படமெடுத்து பப்ளிக் பண்ணுகினம்.

அண்டைக்கு ஒரு பிள்ளை பள்ளிக்கூடப் பை கொழுவிக் கொண்டு போகுது. பையில **Unicef** எண்டு எழுதினதை கலர் பூசி மறைச்சிருக்குது.

அந்தப் பிள்ளையின்ர மனசிலை எவ்வளவு குற்ற உணர்வு. உந்தப் பெரிய நிறுவனங்களே சிறுசுகளின்ர மனதை உடைக்கிற மாதிரி நடந்து கொள்ளுதுகள்.


எத்தினை பேர் அடுத்த ஆளுக்குத் தெரியாமல் கஷ்டப் பட்டவைக்கு உதவி செய்திட்டு அமைதியா இருக்கினம். அவையள் ஆமைகள்.

ஆனாலும் சிலர் சின்னதா உதவி செய்திட்டு கோழிகள் மாதிரி கொக்கரிக்கிறது முறையில்லையெல்லோ?

பேராண்டி! உன்ர பக்கம்தான் நான். நீ எடுத்த முடிவு நல்ல முடிவு. பிறந்த நாள் எண்டுறது வருடா வருடம் வரும். அது சாதாரணமான ஒண்டு. வீண் செலவுகளைத் தவிர்த்து அந்தக் காசிலை யாரும் கஷ்ரப்பட்ட பிள்ளைகள் படிச்சால் அது பெரும் காரியம்.

**ஆச்சி வருவா...**

**மாவை.நா.கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்களைப் பக்கம்



- **கீ**ரையைக் கழுவும் நீரில் சிறிதளவு உப்பு, மஞ்சள்தூள் சேர்த்து கழுவ நச்சுகள் நீங்கி, கீரை சுத்தமாகிவிடும்.
- **ப**ருப்புடன் வேர்க்கடலையையும் வேக வைத்து சேர்த்தால் சாம்பார் மணக்கும், சுவைக்கும்.
- **வெ**ந்த உருளைக்கிழங்கின் மேல் பயத்தம் மாவைப் பூசி செய்யும் வறுவல் பிரமாதமான ருசியைத் தரும்.
- **சோ**ளத்தை வேக வைக்கும்போது ஒரு சிட்டிகை சர்க்கரை சேர்க்க, அதில் இயற்கையாக உள்ள இனிப்புச்சுவை தூக்கலாகத் தெரியும். ருசியும் கூடும்.
- **சா**தம் குழைந்துவிட்டால், பாதி எலுமிச்சைப் பழத்தைப் பிழிந்து, பிறகு வடித்தால் சாதம் பூப்போல் "பொல பொல" வென இருக்கும்.
- **கா**லையில் அரைத்த தேங்காய்ச் சட்னி மீதமாகிவிட்டால் அத்துடன் புளித்த மோர் அல்லது தயிருடன் மஞ்சள்தூள் சேர்த்து தாளித்துக் கொதிக்கவிட வேண்டும். இதுவே மதிய உணவுக்கான மோர்க்குழம்பு ஆகிவிடும்.

# விண்வெளி உணவு





தினசரி நாம் உணவு எடுத்துக்கொள்வதென்பது நமக்கு சாதரண விடயம். ஆனால், விண்வெளி செல்லும் விஞ்ஞானிகளுக்கு, அதுவே ஒரு பெரிய அசைன்மெண்ட். பயிற்சி எடுத்துக்கொள்ளும் அளவுக்கு பெரிய வேலை. இதைத்தான் சாப்பிட வேண்டும், இவ்வளவு தான் சாப்பிட வேண்டும், அதை இப்படித்தான் டிஸ்போஸ் செய்ய வேண்டும் என்று ஏகப்பட்ட விதிகள்!

நீண்ட பயணத்துக்கு நாம் புளியோதரை கட்டி எடுத்துச் செல்வதுபோல, ஒரு வாரம், இரண்டு வாரங்கள் எனப் பயண காலத்துக்கு ஏற்ப விண்வெளி வீரர்களும் நிறைய பாக்கெட்டுகளில் உணவு வகைகளை எடுத்துச் செல்வார்கள். ஆனால், அதில் பல சிக்கல்கள் உள்ளன. விண்கலத்தில் உணவைச் சூடாக்க மைக்ரோவேவ் அவின் இருக்கும். ஆனால், உணவு கெடாமல் இருக்க குளிர்சாதனப் பெட்டி சாத்தியமில்லை. எனவே, அதற்குத் தகுந்தாற்போல மேக்ரோனி, பிரவுனி என்று உணவுகள் எடுத்துச் செல்ல வேண்டும்.

கெச்சப், சாஸ், கடுகு, உப்பு, மிளகு என அனைத்தையும் நீரில் கரைத்த கரைசலாக மட்டுமே உபயோகிக்க முடியும். காரணம், விண்வெளியில் புவிஈர்ப்பு சக்தி இல்லை என்பதால், அவை மிதந்துகொண்டே இருக்கும். ஒருவேளை அது கண்ணிலோ, மூக்கிலோ நுழைந்தால் மிகுந்த அவஸ்தையாகிவிடும். தவிர, ஏதேனும் தொழில்நுட்ப சாதனங்களின் உள்ளே புகுந்துவிட்டால், அந்த சாதனங்கள் கெட்டுப் போகவும் வாய்ப்புண்டு.

ஒரு சராசரிப் பெண்ணுக்கு ஒரு நாளைக்கு சுமார் 2,000 கலோரிகளும், ஆணுக்கு சுமார் 3,000 கலோரிகளும் உணவு தேவைப்படும். விண்வெளி வீரர்களும், நம்மைப் போலவே மூன்று வேளைகள் உணவு உண்ண வேண்டும் என்றாலும், அதிக கலோரிகள் எடுத்துக்கொண்டால் விண்கலத்தில் இருக்கும் போது வீரர்களுக்கு அவை செரிமானம் ஆவதில் சிக்கல் ஏற்படுத்தலாம். எனவே, புரதம், கொழுப்பு, உயிர்ச்சத்து என அவர்களின் உணவுகள் அனைத்தும் விதிகளுக்கு உட்பட்டு சரியான விகிதத்தில் ஊட்டச்சத்து நிபுணர்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படும். சாப்பிட பீநட் பட்டர், சிக்கன், கடல் உணவு வகைகள், பிரவுனீஸ், நட்ஸ் என்றும், பருகிட தேநீர், காபி, ஆரஞ்சு ஜூஸ், லெமனேட் என சில பானங்களும் உண்டென்றாலும், அவையும் விதிகளுக்கு உட்பட்டே.

டிஸ்போஸபிள் பைகளில்தான் விண்வெளி வீரர்கள் உணவுப் பொட்டலங்களை எடுத்துச் செல்வார்கள். ஆனால், அதை டிஸ்போஸ் செய்வதிலும் பிரச்சினை. உண்ட பின்பு, உணவைவிட பத்திரமாக, காற்றில் மிதக்காத வண்ணம் அவற்றைச் சேகரித்துவைத்து, மீண்டும் மண்ணுக்கே எடுத்து வந்துவிட வேண்டும். **சொர்க்கமே என்றாலும். சோறு இல்லாமல் இருக்க முடியுமா நமக்கு!**



# சமைப்போம் சுவைப்போம்



## கரும்புச்சாறு பாயாசம்



### தேவையானவை :

பச்சரிசி – கால் கப்
பாசிப்பருப்பு – கால் கப்
கரும்புச்சாறு – 2 கப்
ஏலக்காய்த்தூள் – ஒரு சிட்டிகை
நெய் (சிறிதளவு)
பன்னீர் துருவல் – 2 டேபிள்ஸ்பூன்
தேங்காய் (பல்லு பல்லாக நறுக்கியது) – 2 டேபிள்ஸ்பூன்
முந்திரிப்பருப்பு (உடைத்தது) – ஒரு டேபிள்ஸ்பூன்

**குறிப்பு:** இதற்குத் தனியாக வெல்லத் துருவலோ, சர்க்கரையோ தேவையில்லை. கரும்புச்சாற்றில் உள்ள இனிப்பே போதுமானது.

### செய்முறை


அரிசியைத் தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைக்கவும். வெறும் வாணலியில் பாசிப்பருப்பை சிவக்க, மணக்க வறுத்துக் கொள்ளவும். பின்னர் அரிசி, பருப்பு இரண்டையும் குக்கரில் போட்டு ஒரு கப் கரும்புச்சாறு ஊற்றி ஒரு விசில் வரும்வரை வேகவிட்டு எடுக்கவும்.

தேவையெனில் சிறிதளவு தண்ணீர் சேர்த்தும் வேகவிடலாம். பின்னர் குக்கரைத் திறந்து கலவையை வாணலிக்கு மாற்றவும். பிறகு இதை அடுப்பில் ஏற்றி, அடுப்பைக் குறைந்த தீயில் வைத்து மீதமுள்ள கரும்புச்சாற்றையும் ஊற்றிக் கலக்கி வேகவிடவும்.

மற்றொரு வாணலியில் சிறிதளவு நெய்விட்டு சூடாக்கி, அதில் தேங்காய்ப் பல், முந்திரிப்பருப்பு, ஏலக்காய்த்தூள் சேர்த்து வறுக்கவும். இதனுடன் பன்னீர் துருவல் போட்டுக் கிளறி அடுப்பை அணைக்கவும். இதை கொதிக்கும் கரும்புச்சாறு பாயாசத்தில் சேர்த்துக் கலந்து அடுப்பை நிறுத்திப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசிக்கு எந்தக் கலரில் வாகனம் வாங்கலாம்?





ஜோதிட சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் யோகங்களில் வாகன யோகமும் ஒன்று. சிலர் ஆட்டோ வாங்கி நேர்மையாக உழைத்து, சில ஆண்டுகளுக்குள்ளாகவே பல ஆட்டோக்கள், சொந்தக்கார்கள் என வசதியாக வாழ்வார்கள்.

வேறு சிலரோ, பல கார்களை வைத்து வியாபாரம் தொடங்கி, காலப்போக்கில் முடங்கிப்போய் ஒன்றுமே இல்லாமல் ஆகிவிடுவார்கள். அதே போல், மாதச் சம்பளம் வாங்கும் ஒருவர் காரோடு உலா வருவார். பெரும் பணக்காரர் பேருந்தில் சென்று வருவார். இப்படிப் பலரையும் பலவிதமாகப் பார்த்திருப்போம். இதற்கெல்லாம் காரணம் வாகன யோகம்தான்.

ஒருவரின் ஜாதகத்தில் 4ஆம் இடத்தில் இருக்கும் கிரகமே அவரின் வாகன யோகத்துக்குக் காரணமாகிறது. அந்த நான்காம் இடத்து அதிபதியோடு எந்தக் கிரகம் சம்பந்தப்பட்டு நிற்கிறதோ, அதைப் பொறுத்தே ஒரு மனிதனுடைய வாகன யோகம் அமையும்.

ஒன்பது கிரகங்களுமே பயணத்துக்கான வாகன யோகத்தை அளிப்பதற்கு முழுஅதிகாரம் உடையவை. அனைத்து கிரகங்களுமே பயணத்தில்தானே உள்ளன. ஒரு கிரகம் 4ஆம் இடத்திலோ அல்லது 4ஆம் இடத்து அதிபதியுடனோ தொடர்பில் இருக்கவேண்டும். அப்படியிருந்தால், அது தொடர்பான வாகன யோகம் அந்த ஜாதகத் தில் வேலை செய்யும்.

இதில், சுக்கிரனே முதன்மையானவராகவும் பிரதானமானவராகவும் இருந்து வாகன யோகத்தைத் தருகிறார். சுக்கிரன் 4ஆம் இடத்திலோ 4ஆம் இடத்து அதிபதியுடன் தொடர்பிலோ இருந்தாலும், சுக்கிரன் ரிஷப இராசியிலோ துலாம் இராசியிலோ இருந்தாலும் சிறுவயதிலிருந்தே வாகன யோகத்தை அனுபவிக்கும் அமைப்பைத் தருவார்.

சூரிய பகவான் ஜாதகத்தில் 4ஆம் இடத்தில் இருந்தாலோ, 4ஆம் இடத்து அதிபதியுடன் தொடர்பில் இருந்தாலோ, அரசு சார்ந்த வாகனங்களை அனுபவிக்கும் யோகத்தைத் தருவார்.

சந்திரன், மிக உல்லாசமான பணமதிப்பு அதிகமுள்ள வாகனங்களை வாங்கக் காரணமாவார். ஜாதகத்தில் சந்திரன் பலம் பெற்று அவரின் திசையும் நடந்தால், சொகுசு வாகனங்களை வாங்குவதற்கும் விமான பிரயாணங்கள் செய்வதற்கும் வாய்ப்பு உண்டாகும்.

செவ்வாய் பகவான், நான்காம் அதிபதியோடு தொடர்பிலிருந்தால் ட்ராக்டர், நெல் அறுவடை செய்யும் இயந்திரங்கள் முதலானவை, ஜாதகரின் ஆளுமையில் இருக்கும்.

புதன் பலம் பெற்று அமையும் போது அல்லது கன்னி, மிதுன இராசியில் புதன் இருக்கும்போது, ஜாதகர் கடன் பெற்றாவது புது வாகனம் வாங்கிவிடுவார்.

குரு பகவான், இரு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் எளிய விலைமதிப்புடன் கூடிய வாகனங்கள் அமைய காரணமாவார். ஒருவரின் ஜாதகத்தில் லக்னத்திலிருந்து 1, 4, 7, 10 ஆகிய இடங்களில் குரு பகவான் இருந்தால், அவர்களுக்கு வாகன யோகம் அமையும். 4, 7, 10 இடங்களைக் குரு பகவான் பார்த்தாலும், அவர்களுக்கு வாகன யோகம் அமையும்.

சனி, சரக்கேற்றும் வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பயன்படுத்தி முன்னேற்றம் காண வழிவகுப்பார்.

இராகு, வாகனத்தின் மூலம் தொழில் அமையக் காரணமாகிறார். பிரமாண்டமான பெரிய வாகனங்களைக் கையாளும் நிலைக்கும் இவரே காரணம். மிகக்குறைந்த வேகத்தில் செல்லும் வாகனங்களான ரோடு ரோலர், பேட்டரியில் இயங்கும் கார் மற்றும் ஈருவீலர் ஆகியவை கேதுவின் அருளால் அமையும்.

**எந்தக் கலரில் வாகனம் வாங்கலாம்?**

புதுக்கார், ஈருவீலர் போன்ற வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படின், நடப்பில் எந்தக் கிரகத்தின் தசாகாலம் நடக்கிறதோ அதற்கேற்ற வண்ணத்தில் வாகனங்கள் அமையும் என்பது நம்பிக்கை.

நாமும் அதற்கேற்ப வாகனங்களின் வண்ணங்களைத் தேர்வு செய்யலாம்.

**சுக்கிர திசை:** வெண்மை, சிவப்பு நிறங்களுக்குக் காரணமாகிறார்.

**சூரியன் :** சிவப்பு, ஆரஞ்சு மற்றும் வெளிர் மஞ்சள்.

**சந்திரன் :** வெண்மை நிறம்.

**சனி :** கறுப்பு, கருநீலம், வெளிர் நீல நிறம்.

**செவ்வாய் :** சிவப்பு.

**ராகு :** நீல நிறம்.

**புதன் :** இவர் ஆளுமையால் பெரும்பாலும் பச்சை நிற வாகனமே அமையும்.

**கேது :** சகல வண்ணங்களிலும் வாகனத்தை அருள்வார்.

**குரு :** மஞ்சள் வண்ணமே பிரதானம்.

# தெளிவே என் சிந்தனையுள்... 25

ஆச்சிரமம் ஒன்றில் தங்கியிருந்து கல்வி கற்ற மாணவர்களின் கல்விக்காலம் முடிவடைந்ததும் குருவானவர் அவர்களை அழைத்து தொடரும் இல்லறம் தொடர்பில் விளக்கமளித்து அனைவரையும் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

ஒரு மாணவன் மட்டும் வீடு செல்லாமல் குருவைச் சந்தித்து "குருவே எனக்கு இப்போது இல்லற வாழ்வில் ஈடுபாடில்லை. உலகம் முழுவதும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்பது என் இலட்சியம் அதை முடித்துவிட்டு இல்லற வாழ்வில் இணையலாம் என நினைக்கிறேன்" என்றான்.

குரு சிரித்துக்கொண்டு "சரி, வா பூஜைக்கு பூப்பறிப்போம்" என பூந்தோட்டத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

பூந்தோட்டத்தில் பூத்துக் குலுங்கிய பூக்களை அந்த மாணவன் பறிக்க முற்பட்டபோது இப்போது பறிக்காதே மாலையில் பறிப்போம்" என்றார் குரு.

"குருவே பூக்களை இப்போது பறிக்காமல் மாலையில் பறித்தால் அவை வாடிவிடுமல்லவா? அனைத்துப் பூக்களும் மரத்திலிருந்து உதிர்ந்துவிடுமே" என்றான் பணிவுடன்.

குரு மீண்டும் சிரித்தபடி மாணவனை தன் அருகே அழைத்து அவன் தோளைத் தடவிக் கொடுத்தபடி கூறினார். "சிஷ்யா இந்தப் பூக்களைப் போலத்தான் வாழ்க்கையும். அது அதை, அது அது செய்ய வேண்டிய காலத்தில் செய்து முடித்து விட வேண்டும். இல்லையேல் இந்தப் பூக்கள் போல உதிர்ந்துவிடும்" என்று.

மாணவனுக்குத் தெளிவு கிடைத்தது. மகிழ்வாக குருவிடம் விடை பெற்றுச் சென்றான்.

**அன்பானவர்களே!**


நாம் எதைச் செய்வதானாலும் அதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்துவிட வேண்டும். "காலத்திற்குப் பயிர் செய்" என்பார்கள் எம் முன்னோர்கள். அது மேற்குறித்த தத்துவத்தையே விளக்கி நிற்கிறது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் பல கண்ட யாழ். கோட்டை



67

செங்கை ஆழியான்

அந்த முயற்சியில் அ.சத்தியசீலன், (கப்டன் அந்தோனி) கா.சேனாதி ராசா, (கப்டன் சேரன்) கு.குமார சங்கர், (லெப், பூபதி) செ. உருத்திரதாஸ், (லெப். வக்கீல்) நந்தபாலன் (சுருளி) ஆகிய போராளிகள் களப்பலியாக நேர்ந்தது.

*05.ஒகஸ்ட் 1990*

யாழ்ப்பாணக் கோட்டை மீதான பெரிதளவிலான தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டினர். கோட்டையின் பலத்தையும் பலவீனத்தையும் முதலில் பரிசீலித்துக் கொண்டனர். அகழிகளுடன் கூடிய கோட்டையின் மூன்று பக்கங்களும் பலமானவை. ஆக கோட்டையின் கடற்கரை வீதிப்பக்கமே பலவீனமானதென மதிப்பிட்டனர். கோட்டையின் சுற்று மதில்களில் நிலை கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முற்ற வெளிக்குள் எவரையும் பிரவேசிக்காது குண்டுகளைப் பொழிந்து தள்ளினர். இவற்றை மீறிப் போராளிகளால் கோட்டைக்குள் ஏவப்பட்ட பசீலன் 2000 குண்டுகள் இராணுவத்தினருக்கப் பெருஞ் சேதத்தை ஏற்படுத்தியிருந்தன. கோட்டையின் கொத்தளங்களிலி ருந்து பீரங்கிகள் அதற்குப் பதிலாக புலிகள் காவலரண் களை நோக்கி ஏவப்பட்டன. இரண்டாவது தாக்குதலிற்கு விடுதலைப் புலிகள் தாமே தயாரித்த டாங்கிகளைப் பயன்படுத்தினர். பாரந் தூக்கிகளையும் புல்டோசர்களையும் டாங்கிகளாக மாற்றினர். இவற்றைப் பயன்படுத்திக் கோட்டையை வெற்றி கொள்ளத் திட்டமிடப்பட்டது. யாழ்ப்பாணத் தளபதி பாணு தலைமை தாங்கி இத் திட்டத்தைத் தயாதித்தார்.

05. ஒகஸ்ட் 1990 பின்னிரவு நேரம் தாக்குதல் ஆரம்பமானது பசீலன் 2000 எறிகணைகள் கோட்டைக்குள் சரமாரியாக ஏவப்பட்டன. அவை கோட்டைக்குள் விழுந்து வெடித்த சத்தத்தால் அப்பிரதேசம் அதிர்ந்து. கோட்டைக்குள் அவலக் குரல்கள் எழுந்தன. போராளிகளின் டாங்கிகள் இவற்றிடையே கோட்டை மதில்களை நோக்கி முன்னேறின. தொலைத் தொடர்பு நிலையப்பக்கமிருந்து பண்ணைச்சந்திக் கூடாகவும் பொலிஸ் நிலையப்பக்கமிருந்தும் போராளிகளின் டாங்கிகள் பலத்த சத்தத்துடன் கடற்கரை வீதியில் பிரவேசிக்க நகர்ந்தன. நூல் நிலையப் பக்கத்திலிருந்து பாரிய வாகனம் (கவசமிடப்பட்டது) ஒன்று முனியப்பர் கோவில் பக்கமாயும் காங்கேசன்துறை வீதியிலிருந்து இன்னொரு புல்டோசர் (கவசமிடப்பட்டது) வடக்குப் பக்கமாயும் கோட்டையை நோக்கி நகர்ந்தன. முனியப்பர் கோயில் பக்கமாகவும் காங்கேசன்துறை வீதியிலிருந்து கோட்டையின் வடபக்கமாயும் பிரவேசித்த புல்டோசர்களின் காற்றடைந்த டயர்கள் இலகுவில் இராணுவத்தினரின் தாக்குதலிற்குள்ளாகி நகரமுடியாது போனது. (தொடரும்...)

# இனிப்பும் கசப்பும்

இரண்டாம்பாகம்



காலத்தின் பதிவு 162

# கடற்புறா

"வந்தவர் குடித்திருந்தார்..."

"அதுதான் தெரிந்த விடயமாயிற்றே"

இன்றைய குடிமிகவும் அதிகமாயிருந்தது எப்பொழுதும் அத்துமீறித்தான் குடிக்கிறான். அத்துமீறிய குடியிலும் ஓரளவு நிதானமிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். இன்று அடியோடு மோசாம். "சரி குடித்துவிட்டு வந்தான். அப்புறம்.." "ஏதேதோ உளறினார்" "என்ன உளறினான்?" உங்களை என் விரோதி என்று சொன்னார்."

பலவர்மன் மார்பு திக்கு திக்கென்று அடித்துக் கொண்டது. "சொல் மேலே என்ன சொன்னான்? என்று வினவினான் கலவரத்துடன்.

"தான்தான் என்னைக் காப்பாற்ற முடியும் என்று சொன்னார்."

அதற்கு என்ன செய்வதாக உத்தேசமாம்?" "இன்று முதல் நானிருக்கும் அறை அபாயமாம்." மஞ்சளழகி பெரும் சங்கடத்துக்குள்ளானாள். மேலே சொல்ல முடியாமல் தலை குனிந்தாள். பலவர்மன் முகத்தில் ஈயாடவில்லை "அப்புறம் என்ன சொன்னான்? என்று கேட்டான் அச்சத்துடன்.

"நாளைக்கு எனது அறை அதிக அபாயமென்றும் ஆகவே ஆகவே" என்று ஏதோ சொல்ல முயன்று முடியாமல் தவித்தாள் மஞ்சளழகி.

"பாதகமில்லை சொல்! எதுவாயிருந்தாலும் சொல்!" பயம் உச்சஸ் தாயிக்குச் செல்லக் கேட்டான் பதற்றதுடன் பலவர்மன்.

மஞ்சளழகி நிலத்தை நோக்கிக்கொண்டு. "ஆகவே தனது அறைக்கு அழைத்தார்" என்றாள். இதைச் சொன்னதும் கண்களைத் தூக்கிப் பலவர்மனைப் பார்க்கவும் செய்தாள்.

நியாயமாக இதைக் கேட்டதும் கொதித்தெழவேண்டிய பலவர்மன் முகத்தில் ஏதோ பெரும் ஆயாசம் தீர்ந்ததற்கு அறிகுறியாக சாந்தி படர்ந்தது. ஆனால் குரலில் மட்டும் அவன் கொதிப்பைக் காட்டி "அப்படியா சொன்னான் அயோக்கியன்! அவனை ஒழித்துக் கட்டிவிடுகிறேன். கொஞ்சம் பொறு" என்றான்.

மஞ்சளழகி விழிகளில் சீற்றம் நிரம்பி நின்றது. "பொறுக்கிற விடயமா இது?" என்று வினவினாள்.

"இல்லையம்மா கொஞ்சம் அவகாசம் கொடு" என்றான் பலவர்மன்.

"நல்ல லட்சணம் இன்னோர் ஆடவன் தனது அறைக்கு என்னை அழைக்கிறான் குடிவெறியில் என் தலைமயிரையும் ஆடையையும் அலங்கோலப்படுத்துகிறான். தந்தை பொறுக்கச் சொல்கிறார்! நல்ல விந்தை இது! நீர் ஒரு தந்தையா?" என்று சுடும் சொற்களைக் கொட்டினாள் அந்தக் கட்டழகி.

அவள் பதற்றம் கூட அவனை அசையச் செய்யவில்லை. "அம்மா! இளையபல்லவன் மிகவும் வஞ்சகன் அவனைத் திடீர் என்று எதிர்த்துக்கொள்வது அபாயம். மெல்லத் தான் அவனைச் சமாளிக்க வேண்டும்" என்றான் பலவர்மன் சற்று நிதானப்பட்டு.

"அவரிடம் பயப்படுகிறீர்களா?" என்று கேட்டாள் மஞ்சளழகி குரலில் வெறுப்புடன்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் பலவர்மன் "ஆம் பயப்படுகிறேன் அந்தப் படைத்தலைவனிடம் விவரமறிந்தால் நீயும் பயப்படுவாய்! பெரும் தந்திரக்காரனிடம் நாம் சிக்கொண்டிருக்கிறோம்! நாமென்ன இந்த அக்ஷய முனையும் சிக்கிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: நல்ல நேரம்
பாடியவர்: ரி.எம்.எஸ்
இசை: கே.வி.எம்



ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும்
ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும்
ஆடி பாடி நடக்கணும் அன்பை நாளும் வளர்க்கணும்
ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும்
ஆடி பாடி நடக்கணும் அன்பை நாளும் வளர்க்கணும்
ஓடி ஓடி உழைக்கணும் ஓ..ஓ..ஓ

வயுத்துக்காக மனுசன் இங்கே கயிற்றில் ஆடுறான் பாரு
ஆடி முடிச்சி இறங்கி வந்தா அப்புறம் தான்டா சோறு
வயுத்துக்காக மனுசன் இங்கே கயிற்றில் ஆடுறான் பாரு
ஆடி முடிச்சி இறங்கி வந்தா அப்புறம் தான்டா சோறு
அங்கொண்ணு சொல்லுறதை கேட்டு நீ
அத்தனை திறமையும் காட்டு
இந்த அம்மாவை பாரு ஐயாவை கேளு
ஆளுக்கொன்னு கொடுப்பாங்க

ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும்
ஆடி பாடி நடக்கணும் அன்பை நாளும் வளர்க்கணும்
ஓடி ஓடி உழைக்கணும் ஓ..ஓ..ஓ..

சோம்பேறியாக இருந்து விட்டாக்கா
சோறு கிடைக்காது தம்பி
சுறுசுறுப்பில்லாம தூங்கிட்டு இருந்தா
துணியும் இருக்காது தம்பி
சோம்பேறியாக இருந்து விட்டாக்கா
சோறு கிடைக்காது தம்பி
சுறுசுறுப்பில்லாம தூங்கிட்டு இருந்தா
துணியும் இருக்காது தம்பி
இதை அடுத்தவன் சொன்னா கசக்கும்
கொஞ்சம் அனுபவம் இருந்தா இனிக்கும்
இதுக்கு ஆதாரம் கேட்டா ஆயிரம் இருக்கு
அத்தனையும் சொல்லிப் போடு.

ஓடி ஓடி உழைக்கணும்.. ஓ..ஓ..ஓ..

வலிமையுள்ளவன் வச்சது எல்லாம் சட்டம் ஆகாது தம்பி
பிறர் வாழ உழைப்பவர் சொல்லுவதெல்லாம்
சட்டம் ஆகணும் தம்பி
வலிமையுள்ளவன் வச்சது எல்லாம் சட்டம் ஆகாது தம்பி
பிறர் வாழ உழைப்பவர் சொல்லுவதெல்லாம்
சட்டம் ஆகணும் தம்பி
நல்ல சமத்துவம் வந்தாகணும்
அதிலே மகத்துவம் உண்டாகணும்
நாம பாடுற பாட்டும் ஆடுற கூத்தும்
படிப்பினை தந்தாகணும் .. நாட்டுக்கு
படிப்பினை தந்தாகணும்.

ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும்
ஆடி பாடி நடக்கணும் அன்பை நாளும் வளர்க்கணும்
ஓடி ஓடி உழைக்கணும் ஓ..ஓ..ஓ..

# இன்னொரு சோமாலியாவாக மாறும் காஸா - உலகம் தன் மனச்சாட்சியைத் திறக்குமா?

குழந்தைகளின் உடலைத் தொடும்போது நேரடியாக எலும்புகளைத் தொடுகிறேன். எலும்புக்கும் தோலுக்கும் இடையே சதையே இல்லை' என்று பிரிட்டனிலிருந்து காஸாவுக்கு வந்து மருத்துவமனையில் தொண்டாற்றி வரும் மருத்துவர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

காஸாவில் பட்டினிச் சாவுகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. உணவு கிடைக்காமல் பல நாட்கள் பட்டினியாக இருப்பதால், எலும்பும் தோலுமாகப் படுக்கையில் மக்கள் படுத்துக்கிடப்பதைக் காணொளிகளில் பார்க்கும்போது நெஞ்சம் பதறுகிறது. உணவு வாங்குவதற்குச் சட்டிகளை ஏந்திக் கொண்டு வரும் மக்கள், முண்டியடித்துக்கொண்டு உணவை வாங்க முயலும் காட்சிகள் நெஞ்சை அறுக்கின்றன.

இஸ்ரேலின் கொடூரத் தாக்குதல்களில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இதுவரை கொல்லப்பட்ட நிலையில், தற்போது உணவுப் பஞ்சத்தாலும் குழந்தைகள் செத்து மடிகிறார்கள். இன்னொரு சோமாலியாவாக காஸா மாறியிருக்கிறது.

ஆகவேதான், 'எங்களுக்குத் தேவை உங்களின் ஆறுதல் வார்த்தைகள் அல்ல... நடவடிக்கைகளே இன்று தேவை' - என்கிறார் நூர் அல்ஷனா. இவர், சக்திவாய்ந்த குண்டுகளால் உருக்குலைந்து கிடக்கும் காஸா பகுதியில் உயிருக்கு அஞ்சாமல் செய்திப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு பத்திரிகையாளர்.

'சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் காஸா மக்கள், உலக சமூகத்திடமிருந்து வரும் வெற்று ஒருமைப்பாட்டு வெளிப்பாடுகளால் சோர்வடைந்து இருக்கிறார்கள். உங்கள் எல்லைகளைத் திறந்துவிடுங்கள். படுகொலைகளைத் தடுத்து நிறுத்துங்கள்' என்று சர்வதேச சமூகத்துக்கு அவர் வேண்டுகோள் விடுக்கிறார். கண்முன்னால் கட்டடங்கள் தகர்வதையும், மக்கள் படுகாயம் அடைவதையும், குழந்தைகள் செத்துமடிவதையும் நேரில் பார்த்துக் கொண்டிருக்கும் ஷனா போன்ற செய்தியாளர்கள் மட்டுமல்ல, அந்தச் செய்திகளை ஊடகங்களில் பார்க்கும் எவருமே இப்படித்தான் சொல்வார்கள்.

காஸாவில் உணவுப் பஞ்சம் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகளை ஊடகங்களில் பார்க்கும் போது, செய்தித்தாள்களில் படிக்கும்போது ஏற்படும் வேதனையை விவரிக்க முடியவில்லை. பாலஸ்தீனர் ஒருவர், 'என்னால் கோர்வையாகச் சிந்திக்கவோ செயற்படவோ முடியவில்லை' என்று உருக்கமாகப் பகிர்ந்திருக்கிறார். அவருடைய நிலைமைக்குக் காரணம் பட்டினி. இங்கே நாம் குறிப்பிட்ட நேரத்தில் காஃபி பருக முடியாமல் போனாலே சோர்ந்து சுருள்கிறோம்.

அதைவிட, குழந்தைகளின் நிலைமைதான் பெரும் துயரமாக இருக்கிறது. 'குழந்தைகளின் உடல்கள் வற்றி உலர்ந்துவிட்டன. அவர்களின் கைகளைப் பிடித்து உயர்த்த முடியாத அளவுக்கு மணிக்கட்டும், தோள்பட்டையும் துவண்டுவிட்டன. அவர்களுடைய உடலைத் தொடும்போது நேரடியாக எலும்புகளைத் தொடுகிறேன், எலும்புக்கும் தோலுக்கும் இடையே சதையே இல்லை' என்று பிரிட்டனிலிருந்து காஸாவுக்கு வந்து மருத்துவ மனையில் ஒரு தாயாகத் தொண்டாற்றிவரும் மருத்துவர் ஒருவர், தன்னுடைய நண்பர்களுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் உயிரைத் தக்கவைப்பதற்குத் தேவையான, சிறப்பு ஊட்டமிக்க உணவு இருப்பு குறைந்து வருகிறது. ஆகஸ்ட் நடுவில் முற்றிலுமாகக் காலியாகிவிடும் என்று ஐ.நா குழந்தைகள் நிதியம் (யுனிசெப்) தெரிவித்திருக்கிறது.

இஸ்ரேலின் அனைத்து அராஜகங்களுக்கும் அமெரிக்க அரசு அப்பட்டமாக ஆதரவளிக்கிறது. இப்போதுகூட, பேச்சுவார்த்தை என்ற ஒன்றை ஏற்பாடு செய்து, அதில் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட முடிவுகளை முன்வைத்தது. அதற்கு காஸாவின் ஹமாஸ் ஆட்சியாளர்கள் உடன்படவில்லை. உடனே டொனால்ட் ட்ரம்ப், 'அவர்கள் சாக விரும்புகிறார்கள்' என்று அறிவித்தார் இதன் பொருள் காஸாவில் போர்க் கொடுமைகள் மேலும் தீவிரமாகும் என்பதே என எவரும் ஊகிக்க முடியும்!

மனிதநேய நெருக்கடி என்ற நிலையில், முன்பு இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்த பல நாடுகள் இப்போது உடனடிப் போர்நிறுத்தத்தை வலியுறுத்துகின்றன. உதவிப் பொருட்கள் தடையின்றிச் செல்வதை அனுமதிக்க வலியுறுத்துகின்றன. பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், அயர்லாந்து, நோர்வே, ஜப்பான், நியூசிலாந்து உட்பட 28 நாடுகள் அண்மையில் இஸ்ரேலைக் கண்டிக்கும் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளன.


வரும் செப்ரெம்பரில் கூடவுள்ள ஐ.நா பொதுச் சபை கூட்டத்தில் பாலஸ்தீனத்தின் சுதந்திரத்தை முறைப்படி அங்கீகரிக்கப் போவதாக பிரான்ஸ் அரசுத் தலைவர் இமானுவேல் மக்ரோன் அறிவித்திருக்கிறார். பிரிட்டனில் 220 நாடாளுமன்ற உறுப்பினர்கள், இதே போன்ற நிலைப்பாட்டை தங்களது அரசும் மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளனர்.

இவையெல்லாம் உலக அளவில் அலையாக எழும் மக்கள் உணர்வுகளின் பிரதிபலிப்பேயாகும். போர் தொடங்கிய 688 நாட்களில் நேரடித் தாக்குதல்களால், இடிபாடுகளில் சிக்கியதால், சிகிச்சை கிடைக்காததால் எனக் கிட்டத்தட்ட 1,86,000 பேர் மரணமடைந்திருக்கிறார்கள். காஸா மக்கள் தொகையில் 100 பேருக்கு ஒருவர் எனக் கொல்லப்பட்டுவிட்டார்கள். காஸாவில் சுமார் 20,000 குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது உலகக் கொடுமை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்





ஒரு மருத்துவர் மிக அவசரமாக ஓடிவந்து ஆப்ரேஷன் அறைக்குள் நுழைந்து ஆடைகளை மாற்றிக்கொண்டு ஆப்ரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தார்.

அங்கு பிள்ளையின் அப்பா மிகவும் கோபத்துடன் இவ்வளவு லேட்டாகவா வருவீர்கள், என் பிள்ளைக்கு ஏதாவது நடந்திருந்தால் யார் பொறுப்பு என்று காரசாரமாக பேசினார்.

**மருத்துவர்:** சிரித்த முகத்துடன் கூறினார். எனக்கு வைத்தியசாலையில் இருந்து Call வந்தது. அவசரமாக ஓடி வந்துவிட்டேன். பொறுமையாக இருங்கள். உங்கள் மகனுக்கு ஒன்றும் ஆகாது. நான் வந்துவிட்டேன் பார்த்துக்கொள்கிறேன் என்றார்.

ஆமாம், சொல்வீர்கள். உங்கள் மகனுக்கு இப்படி ஒன்று நடந்தால் இப்படி லேட்டாக வந்து இப்படியெல்லாம் பேசுவீர்களா? என்றார் பிள்ளையின் தகப்பனார்.

டொக்டர் சொன்னார் புன்னகையுடன், பொறுமையாக இருங்கள். நான் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு ஆபரேஷன் ரூமுக்கு சென்று சில மணித்தியாலங்கள் கழித்து வெளியே வந்து உங்கள் மகன் மிக்க நலமாக உள்ளார். மேலதிக விடயங்களை நேர்ஸிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு அவசரமாக புறப்பட்டுச் சென்றார்.

அவ்விடம் வந்த நேர்ஸிடம் தகப்பனார் பிள்ளை தொடர்பில் கேட்டுவிட்டு டொக்டர் ஏன் அவசரமாகப் போகிறார் என்று வினவினார். அதற்கு நேர்ஸ் சொன்னார்.

டொக்டரின் மகன் நேற்று விபத்தில் சிக்கி உயிரிழந்து விட்டார்.


அவரது அடக்கம் மயானத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அந்தநேரம் உங்கள் பிள்ளையின் நிலை குறித்து Call செய்த போது அதை விட்டுவிட்டு உடனே ஓடி வந்து ஆபரேஷன் செய்துவிட்டு மீண்டும் மகனின் இறுதிச் சடங்கிற்குச் சென்று விட்டார் என நேர்ஸ் கூறினார்.

தகப்பன் தான் ஆவேசப்பட்டது தவறு என்பதை உணர்ந்தவனாக மிகுந்த கவலையுடன் தன் மகனைப் பார்க்கச் சென்றார்.

**நீதி:** யாரையும் வெளியில் பார்த்து எடை போடாதீர்கள். அவர்களுக்குள்ளும் உங்களைவிட அதிகம் பொறுப்பும் கவலையும் இருந்திருக்கும். எனவே வார்த்தைகளைப் பேணிக்கொள்ளுங்கள்...!!

# கவிதைக் கலசம்

## வாழ்வின் அடிநாதம்



அன்பு கண்டு மனதை வென்று வாழ வேண்டும்
இன்ப மன்றி வேறு துன்பம் துறக்க வேண்டும்
என்றும் வாழ்வில் உண்மை கண்டு வாழ வேண்டும்
பொங்கி நிதம் உளம் நிறைந்து வாழ வேண்டும்

பொய்மை தன்னை வாழ்வில் என்றும் விரட்ட வேண்டும்
மெய்மை பேணி வாழ்வில் உண்மை வெல்ல வேணும்
தூய்மையாக வாழும் வாழ்வை எண்ணி
துயருற்ற விலையை அடைந்து நிலைக்க வேணும்

அன்பும் அறமும் வாழ்வில் என்றும் இணைய வேணும்
பண்பும் பயனும் சேர்ந்து உயர்ந்து நிலைக்க வேணும்
துயர்கள் அறியா வாழ்வு நிலைத்து நிற்க வேண்டும்
அன்பே வாழ்வின் அடிநாதம் என வாழ வேணும்

வளவை வளவன்

## நான் ஊருக்குப் போக வேண்டும்



வெளிநாடு வந்து
எத்தனை வருசமாச்சு
அத்தனை வருசமும்
வீணாய்ப் போச்சு
அந்நிய தேசமும்
எனக்கு வேண்டாம்
அடிமை வாழ்வும்
எனக்கு வேண்டாம்
நான் ஊருக்குப்
போக வேண்டும்
நடுங்குங் குளிரில்
நாலு மணிக்கே
எழுந்திட வேண்டும்
நாலைந்து வேலையாய்
ஓடி ஓடி
உழைத்திட வேண்டும்
ஆறேழு யூரோவிற்காக
நாளெல்லாம்
அலைய வேண்டும்
ஏன் என்று கேட்க
யாருமில்லை
என் பாடோ
திண்டாட்டம்!
நான் ஊருக்கு...
போக வேண்டும்
அந்நிய தேசமும்
எனக்கு வேண்டாம்
கண்ணியமில்லா
வேலையும் வேண்டாம்
கையில் செல்போனும்
வேண்டாம்..
காதில் கடுக்கனும்
எனக்கு வேண்டாம்
நான் ஊருக்குப்
போக வேண்டும்

க.நாகேஸ்வரா.
சண்டிலிப்பாய்.


அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
அரசியல் இலக்கியம்
கவிதை கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


## பயணங்கள் ஆயிரம்...



பிடிப்புக்களைப் போலவே,
வெறுப்புகளையும் ஏற்றுக்
கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள்...
வெறுப்புக்களோடு காரணங்கள்
தாமாகவே ஒட்டிக்கொள்கின்றன...

காரணங்கள் ஒட்டிக்கொள்ள
கனம் தாங்காது
அன்பின் இழைகள்
அறுபடத் தொடங்குகின்றன

கடக்க முயல்பவர்களை
இழுத்துப் பிடிக்கும் - உங்கள்
காட்டாற்று கரங்களுக்கு
விலங்கிட்டு விடுங்கள்...

உருளும் இந்த உலகத்தில்
கடந்து செல்ல வேண்டிய
பயணங்கள் இன்னும்
ஆயிரம் இருக்கும்...

சங்கரி சிவகணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா



**தமிழில்** கைவசம் படங்கள் வைத்திருந்தாலும், மலையாளத்திலும் அவ்வப்போது நடிப்பதை வழக்கமாக வைத்துள்ளார் நயன்தாரா. நிவின்பாலியுடன் "லவ் ஆக்ஷன் டிராமா" என்ற படத்தில் 2019இல் நடித்தவர், இப்போது "டியர் ஸ்டூடண்ட்ஸ்" என்ற படத்திற்காக நிவின்பாலியுடன் இணைந்துள்ளார். இந்தப் படத்தில் கம்பீரமான பொலிஸ் அதிகாரியாக வருகிறார் நயன். காமெடி நடிகர் ரெடின் கிங்ஸ்லியும் இந்தப் படத்தில் இடம் பிடித்துள்ளார்.



**சமீபத்தில்** இயக்குநர் எஸ்.எஸ். ராஜமௌலி ஒரு நேர்காணலில் பங்கேற்றார். அப்போது, அவர் இயக்கிய படங்களில் அவருக்குப் பிடித்தமான படம் என்னவென்று ஒரு கேள்வி முன்வைக்கப்பட்டது. அதற்கு, "பாகுபலி" என்றுதான் பதில் சொல்வார் என்றே பலரும் எதிர்பார்த்திருக்க... "நான் ஈ" என்று சொல்லி, ஆச்சரியப்படுத்தி விட்டார், ராஜமௌலி. அங்கேயே அவர் கொடுத்த இன்னோர் ஆச்சரியம்... "எனக்கு நேரடித் தமிழ்ப் படத்தை இயக்குவதற்கு ஆசை இருக்கிறது" என்பதுதான். தமிழ்நாட்டு நாயகர்களில் யார் அந்த பாகுபலியோ?!



**அஜித்தின்** "குட் பேட் அக்லி"யை இயக்கிய ஆதிக், அடுத்தும் அஜித்தை வைத்து இயக்கும் படத்திற்காக ஸ்கிரிப்ட் வேலைகளில் மும்முரமாகி விட்டார். கார்ப் பந்தயத்தில் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கும் அஜித், அதை முடித்ததும் ஆதிக்கின் படத்துக்கு வருகிறார். "குட் பேட் அக்லி" படத்தைவிட இன்னும் இன்னும் புதுவித தோற்றத்தில் அஜித்தைக் காட்டப்போகிறாராம் ஆதிக். "அநேகமாக அடுத்தாண்டில் படப்பிடிப்பு இருக்கும்" என்கிறார்கள்.



**"பைசன்"** படத்தில் துருவ் விக்ரமின் ஜோடியாக நடித்து வருகிறார், அனுபமா பரமேஸ்வரன். மாரி செல்வராஜ் சேரோடு "பரியேறும் பெருமாள்" படத்திலேயே நான் நடித்திருக்க வேண்டியது. தெலுங்கில் பிஸியாக இருந்ததால், அப்போது அது நடக்கவில்லை. அதன்பின், "மாமன்னன்" இலேயும் நடிக்கக் கேட்டார்கள். அதுவும் கைகூடாமல் போய்விட்டது. இந்தத் தடவை, "பைசன்" படத்திற்காகக் கேட்டதும், "வாய்ப்பைத் தவறவிடக்கூடாது" என்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன்" என்று சிலிர்க்கிறார்.

# சின்னத்திரை ........ டையரி

## விரைவில்... மறுமணம்! தினேஷ்



ரீ.விக்கு வந்து இருபதாண்டுகள் ஆகிறது. 2005இல் சென்னை வந்து லயோலாவில் விஸ்காம் சேர்ந்தேன். காலையில் காலேஜ் போய்க்கொண்டே மாலை நேரத்தில் நண்பர்களுடன் சேர்ந்து மீடியா சம்பந்தப்பட்ட இடங்களுக்குப் போவது, ஆட்களைச் சந்திப்பது என்று இருந்தேன். அப்படித்தான் விஜய் ரீ.விக்கு நிகழ்ச்சிகள் தயாரித்துக் கொடுக்கும் ஒரு கம்பெனியின் தொடர்பு கிடைத்தது.

சிறிது நாட்களில் விஜய் ரீ.வியில் இருந்த தமிழ்தாசன் ஒரு சீரியலை டைரக்ட் செய்ய முன்வந்தார். அந்த புரொஜெக்ட்ல உதவி இயக்குநராக சேர்ந்தேன். "மகான்" என்கின்ற அந்தத் தொடர், ராகவேந்திரரின் கதை. சின்ன வயது ராகவேந்திரர் கதாபாத்திரத்துக்கு நிறையப் பேரைப் பார்த்து திருப்தி கிடைக்கவில்லை. ஒரு கட்டத்திலே "பேசாமல் நீயே செய்துவிடு" என்று சொன்னார்கள்.

ஒளிபரப்பாகத் தொடங்கிய அடுத்த சில நாட்களிலேயே ரஜினி சேரிடம் இருந்து அழைப்பு. ராகவேந்திரா கல்யாண மண்டபத்திற்கே வரச்சொல்லிப் பாராட்டினார். ரொம்ப பரவசமான அனுபவம். தொடர்ந்து "பிரிவோம் சந்திப்போம்", "கனா காணும் காலங்கள்", "புதுக்கவிதை" என்று விஜய் ரீ.வியில் சில சீரியல்கள் செய்துவிட்டு ஜீ தமிழ் பக்கம் வந்தேன். அங்கே "பூவே பூச்சூடவா" நடித்துக் கொண்டு "நாச்சியார்புரம்" என்கின்ற சீரியலைத் தயாரித்தேன்.

கொவிட் நேரம் என்பதனால் அந்த சீரியல் எதிர்பார்த்தபடி போகவில்லை. பிறகு பர்சனல் வாழ்க்கையில் கொஞ்சம் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி வந்தது. அந்தப் பிரச்சினைகளின் ஊடாகத்தான் சின்னத்திரை நடிகர் சங்கம், பிக்பாஸ் என்று இயங்கிக் கொண்டே இருக்கின்ற மாதிரி பார்த்துக்கொண்டேன் என்கிறார்.

"என் திருமண வாழ்க்கை குறித்தும் பிரிவு குறித்தும் எல்லாமே எல்லாருக்கும் தெரியும். "எல்லாம் நன்மைக்கே" என்று எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன். "மறுமணம் செய்து கொள்கின்ற எண்ணம் இருக்கிறதா?" என்றதும், "சில வரன்கள் வந்திருக்கிறது. உறுதியானதும் வெளிப்படையாக சொல்லிவிட்டுதான் செய்வேன்" என்கிறார்.



**அடுத்தடியாக,** "ஸ்டண்ட் மாஸ்டர்"கள் அன்பறிவு இயக்கத்தில் நடிக்கிறார் கமல். படப்பிடிப்புக்கான லொக்கேஷன்களை வெளிநாட்டில் சில இடங்களிலும், சென்னையிலும் தேர்வு செய்துவிட்டனராம். படத்துக்கான ஸ்கிரிப்ட் வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்றும் சொல்கிறார்கள். வெறும் ஆக்ஷன் என்பதாக மட்டுமல்லாமல், உணர்வுபூர்வமான கதையாகவும் இருக்குமாம். அதனால், நடிகர்களைப் பார்த்துப் பார்த்துத் தேர்வு செய்யப்போகிறார்களாம். இந்த ஆண்டின் இறுதியில் அல்லது புத்தாண்டின் ஆரம்பத்தில் படப்பிடிப்பு தொடங்கக்கூடும் என்கிறார்கள்.



**விஜயின்** "ஜனநாயகன்" படத்தைத் தயாரித்து வரும் கே.வி.என். புரொடக்ஷன்ஸ், இப்போது "மஞ்சும்மல் பாய்ஸ்" இயக்குநர் சிதம்பரம் இயக்கும் "பாலன்" படத்தையும் தயாரிக்கிறது. இந்தப் படத்துக்கான திரைக்கதையை, பகத் பாசிலை வைத்து "ஆவேசம்" படத்தை இயக்கிய ஜித்து மாதவன் எழுதுகிறார். இதன் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியிருக்கிறது. சென்னையிலும் படப்பிடிப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இதற்கிடையே, "சூர்யாவின் அடுத்த படத்தை ஜித்து மாதவன்தான் இயக்குகிறார்" என்ற பேச்சும் ஓடிக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

460

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# சிறு நீரகம் தொடர்பான பிரச்சினைகள் உங்களுக்கான பதில்கள்...


**1. நான் 35 வயதுடைய ஆண். எனது சிறுநீரகத்தை தானமாக வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எனது குடும்ப வாழ்க்கையில் ஏதேனும் பாதிப்புகள் ஏற்ப டுமா? சிறுநீரகத்தை தான மாக வழங்குவது பாதுகாப் பானதா? ஏதேனும் பின் விளைவுகள் ஏற்படுமா?**

பொதுவாக சிறுநீரக தானம் செய்யும் முன், தானம் செய்ப வருக்கு ஏதேனும் நோய்கள் இருக்கிறதா என பரிசோதிப்போம். அவ்வாறு ஏதேனும் நோய்கள் காணப்பட்டால் நீங்கள் சிறுநீரக தானம் செய்யமுடியாது. பிரதான மாக நீரிழிவு, சிறுநீரகம் தொடர் பான வேறு பிரச்சினைகள், உயர் குருதி அமுக்கம் மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் இருக்கிறதா என பரிசோதிப்பது வழமை. இன் னொரு விடயம் என்னவென்றால், இலங்கையில் பணத்திற்காக சிறுநீரகத்தை விற்பதோ அல்லது தானம் செய்வதோ தண்டனைக் குரிய குற்றமாகும்.

அதேபோல், இன்னொருவரின் வற்புறுத்தலால் நீங்கள் சிறுநீர கங்களை தானம் செய்ய முடியாது. தானம் செய்வதால் குடும்ப உற வில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பின்விளைவுகள் ஏதேனும் ஏற்ப டுமா என்று பார்த்தால், ஏனைய வர்களுடன் ஒப்பிடும்போது சிறியளவில் உங்களுக்கு உயர் குருதி அமுக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படும். பெரி தாக வேறு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. சிறுநீரகத்தை தான மாக வழங்குவது பாதுகாப்பானது தான்.

ஆனால், சிறுநீரகத்தை தான மாக வழங்கும் போது உங்களுக்கு பொது மயக்க மருந்து வழங்கி, சத்திர சிகிச்சை செய்வதன் மூலமே சிறுநீரகம் வெளியில் எடுக்கப்படும். இந்த பொது மயக்க மருந்தினால் மற்றும் சத்திர சிகிச்சையினால் ஏற்படும் பாதிப் புக்கள் எல்லோருக்கும் பொதுவா னவை. சத்திர சிகிச்சைக்கு பின் னரான பாதிப்புகள் என்று பார்த் தால், சத்திர சிகிச்சை செய்த பகுதியில் நோ, கிருமித்தொற்று ஏற்படலாம். வைத்தியசாலையில் 3-5 நாட்கள் வரை இருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இது தவிர வேறு எவ்வித பாதிப்பும் உங்களுக்கு ஏற்படாது. நீங்கள் சிறுநீரகங்களை உங்கள் உறவினருக்கு அல்லது நெருங்கிய நண்பருக்கு மாத்திரமே வழங்க முடியும்.

**2. 60 வயதுடைய பெண்ணா கிய எனக்கு மாலை வேளைக ளில் இரண்டு கால்களிலும் வீக்கம் ஏற்பட்டு, காலையில் குறைவடைகிறது. வைத்தியர் கள், எனக்கு பரிசோதனைகளைச் செய்து பார்த்து விட்டு, எந்த**



**பிரச்சனையும் இல்லை என்று கூறுகின்றனர். இதற்கு எந்த வொரு மாத்திரைகளையும் பாவிப்பதில்லை. இது சிறுநீரக நோயின் அறிகுறியா? இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

கால்களிரண்டும் வீங்குதல் என்பது, பல நோய்களின் அறிகுறி யாகும். பொதுவாக இது, சிறுநீரக பிரச்சினைகள் காரணமாக ஏற்பட லாம். இது தவிர ஈரல் சம்பந்தமான பிரச்சினைகள், இதய நோய்கள் மற்றும் கால் நாளங்களில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்படினும் கால் வீக்கம் ஏற்படலாம். கால் வீக்கம் எப்போதும் சிறுநீரக பிரச்சினை களால் ஏற்படுவதில்லை. சிலசமயங் களில், சில மருந்துகளாலும் கால் வீக்கம் ஏற்படலாம். உயர் குருதி அமுக்கத்திற்காக வழங்கப்படும் Amlodipine என்ற மருந்தின் பக்கவிளைவாகவும் இந்தக் கால் வீக்கம் ஏற்படலாம். உங்களுக்கு செய்யப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் அனைத்தும் சாதாரண மாக இருப்பதால் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

பொதுவாக கால் வீங்குபவர்க ளுக்கு ஈரல் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான பரிசோதனைகளே செய்யப்படுகின்றன. அதோடு இரு கால்களையும் பரிசோதித்து நாளம் சம்பந்தமான பிரச்சினைகள் இருக்கிறதா என பரிசோதித்து, எந்த பிரச்சனையும் இல்லையெனில், கால் வீக்கத்தை குறைப்பதற்கு சில மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இதற்கு பெரிதாக பயப்படவேண்டிய அவசியமில்லை.

**3. 60 வயதான எனக்கு நீரி ழிவு நோய் காரணமாக சிறு நீரக பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக வும், எனது சிறுநீரகம் 45% தொழிற்பாட்டுடனே இருப்பதாக வும் வைத்தியர்கள் கூறியுள்ள னர். நான் மருந்துகளை ஒழுங் காக பாவிக்கிறேன். எனது சிறு நீரக தொழிற்பாட்டை கூட்டுவ தற்கு நான் என்ன செய்ய வேண் டும்?**

சிறுநீரக பாதிப்பு திடீரென ஏற் படாது. உங்களுக்கு நீரிழிவு நோய் நீண்ட காலத்திற்கு இருக்குமாயின், அது கட்டுப்பாடற்ற நிலையில் காணப் படுமாயின் சிறிது சிறிதாக உங்கள் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும். இது தொடர்ச்சியாக காணப்பட்டால் சிறு நீரக செயலிழப்பு ஏற்படும். இந்த பாதிப்பிலிருந்து மீளுவதென்பது இயலாத காரியம். சிறுநீரக தொழிற் பாட்டை அதிகரிக்க எந்த ஒரு சிகிச்சையும் இல்லை.

ஆனால், 45% தொழிற்படும் உங்கள் சிறுநீரகங்களை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பது என் பது பற்றி நீங்கள் கட்டாயமாக அறிந் திருக்க வேண்டும். முதலாவதாக, உங்கள் குருதி அமுக்கம், நீரிழிவு என்பன கட்டுப்பாட்டினுள் இருக்க வேண்டும். Brufen, Voltaren போன்ற வலிநிவாரண மாத்தி ரைகளை எடுக்கும் போது, உங் கள் சிறுநீரகத்திற்கு போகும் இரத் தத்தின் அளவு குறைந்து சிறுநீரக பாதிப்பு மேலும் அதிகரிக்கும்.

இவ்வாறான மருந்துகள் எடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு சிறுநீரில் கிருமித்தொற்று வருமாயின், அது உங்கள் சிறுநீரகங்களை சிறிது சிறிதாக பாதிக்கும். எனவே, இவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். இவ்வாறாக பாதுகாப்பாக இருந்தால், சிறுநீரகம் தொடர்ந்தும் பாதிப்படைவதை தடுக்கலாம். சிறுநீரகம் முற்றாக பாதிப்படைந்தால், சிறுநீரகத்தை மாற்ற வேண்டி இருக்கும் அல்லது தொடர்ந்து இரத்த சுத்திகரிப்பு செய்ய வேண்டி இருக்கும். உங்களுக்கு நீரிழிவு அல்லது உயர் குருதி அமுக்கம் காணப் படுமாயின், ஆரம்பத்திலேயே சிறுநீரக பரிசோதனைகளை மேற் கொண்டு, சிறுநீரக பாதிப்பு இருக் கிறதா என்று பார்த்து அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்வதன் மூலம் சிறுநீரகம் தொடர்ந்தும் பாதிப்படைவதை தடுக்கலாம். முற்றாக சிறுநீரகம் செயலிழக்க முதல் அதனை கண்டறிந்து தடுக்க வேண்டும்.

Dr.வே. பவந்தன்
சிறுநீரக வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தால், அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மாவட்டத்திற்கு சட்ட வைத்திய அதிகாரியை நியமியுங்கள் - ரவிகரன் எம்.பி

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சட்டவைத்திய அதிகாரி இன்மை மற்றும் கணிய அச்சுவெட்டு வருடி (CT scanner) இன்மை என்பவற்றால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தமக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**



முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் தற்போது சட்டவைத்திய அதிகாரி இன்மையால் எமது மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றது.

குறிப்பாக இறப்பவர்களின் உடல்களை உடல்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய தேவையிருப்பின், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கே உடலங்களை எடுத்துச்சென்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது. இவ்வாறு எடுத்துச் செல்லும் உடல்களை உடற்கூறு பரிசோதனை மேற் கொண்டு விட்டு மீள எடுத்துவர இரண்டு நாட்களாகின்றன. இதனால் இறந்தவருடைய உறவினர்கள் பலத்த இடர்பாடுகளுக்குப் பின்னரே உடலத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்கின்ற நிலைகாணப்படுகின்றது.

எனவே முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்திய சாலைக்கு சட்டவைத்திய அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்திய சாலையில் கணிய அச்சு வெட்டு வருடி இல்லாதநிலையும் காணப்படுகின்றது.

இதனால் கணிய அச்சு வெட்டு வருடி பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய நோயாளிகள் யாழ்ப்பாணத்திற்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைகள் காணப்படுகின்றன.

இவ்வாறாக இறந்தவர்களின் உடல்கள் உடல்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்திய சாலைக்கும், CT ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய நோயாளிகள் யாழ்ப்பாணத்திற்கும் சென்று வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

எனவே முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு விரைந்து ஒரு சட்டவைத்திய அதிகாரியை நியமிப்பதுடன், கணிய அச்சு வெட்டு வருடி வழங்கப்பட வேண்டுமெனவும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன் என்றார். இந்நிலையில் குறித்த தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 200 | 140 | 160 |
| தக்காளி | 300 | 280 | 300 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 240 |
| கோவா | 320 | 250 | 350 | 230 | 320 |
| கரட் | 300 | 450 | 500 | 400 | 500 |
| பூசணி | 100 | 120 | 80 | 60 | 50 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 230 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 150 | 120 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 280 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 400 | 300 |
| லீக்ஸ் | 320 | 250 | 250 | 180 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 250 | 100 | 120 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 300 | 350 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 400 | 180 | 300 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 150 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 60-100 | 150 | 80 | 80 |
| தேசிக்காய் | 400 | 250 | 400 | 300-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 190 | 150 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 500 | 450 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 150 | 250 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 180 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 80 | 200 |

# இராசிபலன்

31.08.2025
ஆவணி 15 , ஞாயிற்றுக்கிழமை
அட்டமி முன்னிரவு 11.11மணி வரை

அனுசம் பிற்கல் 4.49 மணிவரை
சுப நேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி


வளவன்




உடல் நலனில் கவனம் தேவை, யோசித்து செயற்பட வேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வேலைச் சுமை கூடும், கௌரவக் குறைவான நாள்.




நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்,பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.





கனவுப்பலிதமுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, உற்சாகமான நாள்.




உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவுகள் பகை மாறும், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.




உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




செல்வ நிலை உயரும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாடு முன்னேற்றம் தரும்.




பொது வாழ்வில் புகழ் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சியுண்டு.




உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.





பயணங்களில் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும்.




இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படாலம், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்




வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வரலாம்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

கெட்ட பழக்கங்கள் வருவது எளிது பின்பு அது போவது கடினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தீஸ்வராவின் வரலாற்றுத் தடத்தில் அதிபர் வாசுகி தவபாலன்

## B.Sc.(Hons),Sp. Trd.Science, PGDE, M.Ed, M.Phil. PGDEM


## 11.01.2017 - 31.08.2025



### ஆசிச்செய்தி

பாடசாலையில் திறம்பட சைவ த்தை வளர்ப்பதில் மிகவும் அக் கறையாக இருந்தவர். நடேசர் அபிஷேகமாகட்டும், பொங்கல் விழாவாகட்டும், ஆடிப்பிறப்பு, நவராத்திரி விழா, திருவெம்பாவை விழா ஆகிய தினங்களை சிறப்பாக முன்னெடுத்து நடத்தியவர்.கிறிஸ்தவ, முஸ்லிம் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து அவர்களின் சமய விழாக்களையும் நடாத்தி பாடசாலைக்கு பெருமை சேர்த்தவர்.இப்படியாக பாடசாலையை திறம்பட நடாத்திய அதிபரின் பணிகளை நாம் இழக்கின்றோம். அவரின் சேவையினைப் பாராட்டி அவரை சுகதேகியாக வாழ, வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**க.சுரேந்திர சர்மா, பாடசாலைக் குரு.**



### ஆசிச்செய்தி

யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர் மதிப்பிற்குரிய திருமதி. வாசுகி தவபாலன் அவர்களுக்கு.எமது கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து நீங்கள் மேற்கொண்ட சமூகநலச் சேவைகளான சமாதான வலுவூட்டல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான செயல்திட்டங்கள், கல்வி உதவித் திட்டங்கள் போன்றவை சமூகத்தில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தின. நீங்கள் ஒரு ஆசானாக மட்டுமல்ல சமூகத்தின் ஒட்டுமொத்த நலன்களையும் மையப்படுத்தி மேற்கொண்ட உங்கள் சேவை எங்களுக்குத் தோழமையாகவும், வழிகாட்டுதலுமாக அமைந்தது. ஒரு புறம் கல்வியை வழங்கி மாணவர்களின் மனங்களை வளப்படுத்திய நீங்கள், மறுபுறம் சமூக சேவையின் மூலம் அவர்களின் வாழ்க்கைப் பாதையை செம்மையாக்கினீர்கள். இப்போது நீங்கள் ஓய்வு பெறுகின்ற இந்த தருணத்தில்,

உங்கள் அன்பும், அர்ப்பணிப்பும் மற்றும் எங்களுக்கு நீங்கள் வழங்கிய அனைத்து விதமான ஒத்துழைப்புக்களும் எங்களது நினைவுகளில் என்றும் நிலைத்திருக்கும். வாழ்க்கையின் புதிய அத்தியாயம் உங்களுக்கு நிம் மதியும், ஆரோக்கியமும், சந்தோசமும் நிறைந்ததாக அமைய எங்கள் இதயங்கனிந்த வாழ்த்துக்களையும், இறையாசீரையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அருட்தந்தை. இயூஜின் பிரான்சிஸ்**
**புனித நீக்கிலார் ஆலய பங்கு, நாவாந்துறை.**



### ஆசிச்செய்தி

கல்விக்கு கரை இல்லை என்பதற் கமைய கல்விக் கண் திறந்து கலை பல கற்று எண்ணற்ற கல்விமான்களை உருவாக்கி உயர்வு பெற வைத்துள்ள "ஞானத்தேனீ" என ஆளுமையுடன் அழைக்கப்பட வேண்டிய திருமதி. வாசுகி தவபாலன் அவர்கள் ஓய்வு பெறுகின்ற இவ்வேளையில் ஓய்வின்றி சுறுசுறுப்புடன் பணியாற்றிய பெருமையுடனும் பேரு வகையுடனும் செல்வது பாராட்டப்பட வேண்டியதே!

ஆசிரியராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, அதிபராக என பல பதவிகளைத் தன்னகத்தே கொண்டு பல இராட்சத சேவைகளை செய்யனிட்டுள்ள கல்விக் களஞ்சியம் கருவூலப் பெட்டகம் "திருமதி. வாசுகி தவபாலன்" அவர்களை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**தேசாபிமானி. அல்ஹாஜ்**
**மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸ்மி),**



### வாழ்த்துச்செய்தி

எமது கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் அவர்களின் தலை மைத்துவம் இக் கல்லூரியின் எதிர் காலத்தினை பிரகாச மாக்கியுள்ளது. பாடசாலையின் உட்கட்டமைப்பு விருத்தி, ஆரம்பப் பிரிவு உருவாக்கம் மாணவர்களின் ஆளுமை விருத்தி, அடைவு மட்ட மேம்பாடு என்பவற்றில் நீங்கள் காட்டிய அக்கறை அளப் பெரியது. காலத்தால் அழியாதவாறு நீங்கள் கல்லூரியில் சாதித் தவைகள் ஏராளம். உடல் பணியாற்ற இட மளிக்காத போதிலும் உறுதி தளராத மனம் கல்லூரி சமுகத்திற்கு புதிய உத்வேகம் கொடுத்தது. உங்களின் ஓய்வு காலம் மகிழ்ச்சியும், அமைதியும், ஆரோக்கியமும் நிறைந்ததாக அமையட்டும்.

**S. யசோதரன், பிரதி அதிபர்,**
**யா/வைத்தீஸ்வரா கல்லூரி.**



### வாழ்த்துச்செய்தி

ஈழத்துச் சிதம்பரம் என சிறப் பிக்கப்படும் சிவன்கோவில் அமைந் துள்ள புனித பூமி யான காரைநகர் மண்ணிலே பிறந்த மணி விழா நாயகி யான திருமதி வாசுகி தவபாலன், எமது அலுவலகத்தில் நடைபெறு கின்ற கலைநிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வு கள், கலாசார பண்பாட்டு ஊர்வல நிகழ்வுகள் அனைத்திலும் தமது கல்லூரி மாணவர்களின் ஆற்றுகைகளை வெளிக் கொணர்வதற்கு உறுதுணையாக இருந்த அதிபராகவும் விளங்கியவர். மணிவிழா நாயகியான பெருமதிப்பிற்குரிய திருமதி வாசுகி தவபாலன் அம்மையார் நீண்ட ஆயுளோடும், சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ்வதற்கு எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருள் புரிவாராக.

**எஸ்.சுதர்சன், பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**



### சேவை விபரம்

**ஆசிரியர் சேவை**

**யா/ புங்குடுதீவு சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயம்**
**14.12.1987 - 01.03.1998**

**யா/ புங்குடுதீவு சண்முகானந்தா வித்தியாலயம்**
**02.03.1988 - 14.06.1988**

**யா/ புங்குடுதீவு மகாவித்தியாலயம்**
**15.06.1988 - 14.02.2001**

**யா/நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலை**
**15.02.2001 - 04.03.2002**

**யா/ வைத்தீஸ்வரா கல்லூரி**
**05.03.2002 - 01.06.2003**

**கடமைபுரியும் விஞ்ஞானபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் (தீவக வலயம்)**
**02.06.2003 - 17.01.2013**

**அதிபர் சேவை**

**யா/காரைநகர் இந்துக் கல்லூரி**
**18.01.2013 - 10.01.2017**

**யா/வைத்தீஸ்வரா கல்லூரி**
**11.01.2017 - 31.08.2025**



### பல கல்வித் தகைமைகளையும் ஆற்றலும் கொண்டவர்.

பல கல்வித் தகைமைகளையும் (SP.Trd.Science, BSc hons, PGDE, M.Ed,M.Phil,PGDEM) கூர்மையான அறிவும், வினைத் திறனாகக் கற்பிக்கும், பயிற்றுவிக்கும் ஆற்றல்களும் மற்றும் கல்வி முகாமைத்துவமும், நிர்வாகத்திலும் சிறந்த திருமதி வாசுகி தவபாலன் ஆசிரியையாக, வலயக் கல்வி (விஞ்ஞானம்) அதிகாரியாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் நிகழ்வையொட்டி வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெரு மகிழ்வடைகின்றேன். அவர் பல்கலைக்கழக மாணவியாக இருந்த காலத்தில் இருந்து கல்விப் புலத்தில் கண்ட வளர்ச்சியை நான் நன்கு அறிவேன். இவர் தலைமையில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் விருந்தினராகப் பங்கு கொண்டுள்ளேன். அவரது 38 வருட கல்விப் பணி மிகவும் சவால் நிறைந்ததும், சாதனையானதும். அவர் கற்பித்த பாடசாலைகள், நிர்வாகம் புரிந்த கல்வி வலயம், அதிபராக கடமையாற்றிய கல்லூரிகள் ஆகியன கல்விச் செயற் பாடுகளை முன்னெடுப்பதில் பல்வேறு இடர்பாடுகளைக் கொண்டிருந்தன.பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளினதும், பின்தங்கிய மாணவர்களினதும் கல்வி மேம் பாட்டிற்காக கடினமாக உழைத்தவர் இதில் வெற்றியும் கண்டவர். தொய்வுற்ற நிலையில் இருந்த வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்கு புதுவாழ்வு கொடுத்தவர்.

அவர் உடல் நலம் குன்றியிருந்த பொழுது அவர் மேல் கல்வியாளர்களும், சமூகமும் காட்டிய அன்பும், ஆதரவும், இறைவழிபாடும் அவரை மீண்டும் பணிக்குத் திருப்ப வைத்தது.அதிபர் தனது ஓய்வுக் காலத்தில் மேலும் கல்விப் பணிகளிலும் சமுக சமுதாய செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். இன்று எம் மத்தியில் வெற்று இடமாக காணப்படும். பெண் தலைமைத்துவ குறைபாட்டை நீக்க வேண்டும். துடிப்பான சமுக செயற்பாட்டாளராக விளங்க வேண்டும்.அதிபரின் ஓய்வுக் காலம் சகல நிலைகளிலும் சிறப்பாக இருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

**வாழ்நாள் பேராசிரியர்,**
**பொன். பாலசுந்தரப்பிள்ளை .**
**முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.**

(C-3769)



### வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராகக் கடமை யாற்றி 01.09.2025 முதல் ஓய்வு பெறும் அதிபர் - திருமதி வாசுகி தவபாலன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த் துவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன். 1987 ஆம் ஆண்டு முதல் ஆசிரியராக தனது சேவையை ஆரம்பித்த இவர் தீவகக் கல்வி வலயத்தில் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப் பாளராக 2003 ஆம் ஆண்டு முதல் 2013 வரை 10 வருடங்கள் கடமை யாற்றினார். இக் காலத்தில் இவருடன் நானும் தீவகக் கல்வி வலயத்தில் பணி புரிந்தமையினால் இவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

இவர் தீவகப் பகுதியில் ஆசிரியராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, அதிபராக 27 வருடங்கள் கடமை யாற்றியமை பாராட்டுக்குரியது.தீவகக் கல்வி வலயத்தில் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் ஆசிரியர் அபிவிருத்திக்காகவும், மாணவர் அபிவிருத்திக்காகவும் பாரிய முயற்சிகளை எடுத்திருந்தார்.

தனக்கு வழங்கப்பட்ட பணிகளை நேர்த்தியாக, வெகு சிறப்பாக செய்து முடிப்பதில் இவருக்கு நிகர் எவருமில்லை. அதிபர் நியமனம் கிடைத்த போதினும் இவரின் சேவையை வலயம் பெற வேண்டும் என நினை த்திருந்தோம்.ஆனால் யா/ காரைநகர் இந்துக் கல்லூரியில் அதிபர் வெற்றிடம் ஏற்பட்ட போது இவரை அக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை யேற்பட்டது.

காரைநகர் இந்துக் கல்லூரியில் நான்கு வருடங்கள் சேவையாற்றினாலும் பாடசாலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டினார்.மாணவர்கள் பாட, இணைப்பாட விதான பெறுபேறுகளில் பெரும் முன்னேற்றத்தைக் காண்பித்தனர். அதிபர்- ஆசிரியர்- பெற்றோர் - பழைய மாணவர் உறவு சிறப்பாக அமைந்திருந்தன.

பாடசாலைக் கவின் நிலை பௌதிக வள அபிவிரு த்தியுடன் மாற்றம் பெற்றிருந்தன. பாடசாலைக்கென 18 பரப்புக்காணி சமூகத்தின் முயற்சியினால் கொள்வனவு செய்யப்பட்டது.சிறந்த தலைமைத்துவமும் ஆளுமையும் கொண்ட இவர் யா/வைத்தீஸ்வரா கல்லூரியைப் பொறுப்பேற்ற போது பாடசாலை மிகவும் குறைவான மாணவர்களைக் கொண்டிருந்தது.

1AB பாடசாலையான இக் கல்லூரி தளர்வான நிலையிலிருந்தமையினால் இப் பாடசாலையை முன் னேற்ற பல சவால்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இப் பாடசாலையில் ஆரம்பப் பிரிவினை திணைக்கள அனுமதியுடன் ஆரம்பித்ததன் மூலம் இப் பாடசாலை வளர்ச்சிப் பாதையை நோக்கி வீறு நடை போட்டது. எல்லாத்துறைகளிலும் வளர்ச்சிப் போக்கான மாற்றம் ஏற்பட்டிருந்தது.

திடீரென இவரது உடல் நலம் பாதிக்கப்பட்டமை யினால் இவர் தனது பணியினை உத்வேகத்துடன் ஆற்ற முடியாத நிலையேற்பட்டது.

இவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஓய்வு காலத்தில் தான் பெற்ற அறிவு, அனுபவங்களை பகிர் வதன்மூலம் எதிர்கால கல்விப் புலத்திற்கு உதவ வேண்டுமென வேண்டுகின்றேன். இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் நீண்ட ஆயுள், ஆரோக்கியத் துடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வ.இராதாகிருஷ்ணன்**
**ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**தீவகக் கல்வி வலயம்.**



### வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி


கால்நூற்றாண்டு காலம் கல்விச் சமூகத்திற்கு நீங்கள் ஆற்றிய பணி மகத்தானது. ஆசிரியராய்,உதவிக் கல்விப் பணிப்பாளராய், அதிபராய் தாங்கள் பணியாற்றிய இடங்களில் எல்லாம் ஆற்றிய சேவை அளப்பரியது.

அர்ப்பணிப்பும் தன்னம்பிக்கையும் தளராத உறுதியையும் தாங்கிய தங்கள் தலைமைத்துவம் எமது வலயப் பாடசாலையான யா/வைதீஸ்வரா கல்லூரியில் மிளிர்ந் ததனை நான் அறிவேன். மாணவச் செல்வங்களுக்கும் கல்லூரி சமூகத்திற்கும் ஒரு கலங்கரை விளக்காய் நின்று நீங்கள் ஆற்றிய சேவை உங்களுக்குள் ஆத்மார்த்தமான திருப்தியினை ஏற்படுத்தி யிருக்கும் என நம்புகிறேன்.

மாணவர்களின் நல்வாழ்விற்காக ஓய்வின்றி உழைத்த உங்களுக்கு இந்த ஓய்வுக்காலம் மகிழ்ச்சியும் நிம்மதியும் நிறைந்திருக்கட்டும். உங்கள் ஓய்வுக் காலம் ஒளிமயமான தாக அமைய வாழ்த்துகிறேன்.

**திருமதி மாலதி முகுந்தன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

### வாசுகி வைத்தீஸ்வராவின் வரலாற்றுத் தடம்



வைத்தீஸ்வரா கல்லூரி அறியப்பட
அடித்தளமிட்ட செயல் முனைப்போடு
ஆளுமை கொண்ட அதிபர் இவர்.

அறிவோடு ஞானமும் தலைமைத்துவமும்
தனித்துவமும் கொண்டவர் நமது அதிபர்

வைத்தீஸ்வரா அறியப்பட அனைத்து துறைகளிலும்
நமது பாடசாலை சாதனை படைக்க உழைத்தவர்

வைத்தீஸ்வராவின் வரலாறு வாசுகியுடன்
சேர்ந்தே உருவாகியிருந்தது

ஓய்வுக்காலம் சிறக்க உடல் நலம் காக்க
இறைவன் துணை நிற்பார் வாழ்த்துகின்றேன்.

**தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/ வைத்தீஸ்வரா கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்படும் சொல்லை விட எழுதப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது. – அடொல்ப் ஹிட்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருவிழாவுக்கு முன்னைய நிவேதனமே ரணிலின் கைது

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்ததன் பின்னர் தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஆடிப்போயுள்ளனர்.

யாரைக் கைது செய்தாலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படமாட்டார் என்ற நினைப்பே பலரிடம் இருந்தது.

இவ்வாறான நினைப்புக்கு பல காரணங்கள் இருந்தன. அதில் ஒன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெளிநாடுகளின் ஆதரவு நிறையவே உண்டு.

ஆக ரணிலைக் கைது செய்தால், வெளிநாடுகளின் அதிருப்திக்கு அநுர அரசாங்கம் ஆளாக வேண்டிவரும்.

ஆகவே ரணிலைக் கைது செய்வதற்கான வாய்ப்பு இல்லை என்றே முடிவு எடுக்கப்பட்டது.

இங்குதான் ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் மிக நுட்பமாகச் செயற்படுகிறது.

அதாவது தோல் இருக்கச் சுளை விழுங்கிகள் பலர் இருக்கின்ற போதிலும் அவர்களை விட்டுவிட்டு அரச சொத்தை சொந்தத் தேவைக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், குற்றப் புலனாய்வுத் துறையினர் ரணிலைக் கைது செய்கின்றனர்.

இங்குதான் மிகப்பெரும் குற்றவாளிகள் வெளியில் இருக்க, வலுக்குறைந்த குற்றச்சாட்டைக் கொண்ட ரணிலைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்தது தவறு என்ற விமர்சனம் எழுகிறது.

ஆனால் இங்குதான் அநுரவின் அரசாங்கத்தின் தந்திரோபாயம் மிளிர்கிறது.

அதாவது, ஒரு பரீட்சையில் இலகுவான கேள்விகளுக்கு விடையளித்துவிட்டு, கடினமான கேள்விகளை இறுதியில் கையாளுகின்ற முறைமை உண்டு.

இவ்வாறான முறைமையின் மூலம் நேரச்சிக்கல், பதகளிப்பு என்பவற்றைத் தவிர்க்க முடியும்.

இந்த நுட்பமே ரணிலின் விடயத்திலும் பிரயோகிக்கப்படுகிறது.

ஆம், மிகப் பெரும் குற்றச்சாட்டுடையவர்களை அடுத்தடுத்துக் கைது செய்து சிறையில் அடைக்கும்போது எழுகின்ற குழப்பங்களில் ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் கைது செய்யப்படாமல் தப்பித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

மாறாக, ரணிலை முதலில் கைது செய்தால் ரணிலையே கைது செய்து விளக்கமறியலில் அடைக்கும்போது மற்றவர்களை எப்படிச் சும்மா விட முடியும் என்ற கருத்துருவாக்கத்தை பொது மக்கள் தாமாகவே உருவாக்கிக் கொள்வர்.

ஆக, ரணிலின் கைது என்பது திருவிழாவுக்கு முன்னதாக ஆலயங்களில் நடைபெறுகின்ற அட்டதிக்குப் பாலகருக்கான நிவேதனம் போன்றது.

இனித்தான் திருவிழாவே நடக்கப்போகிறது. இந்தத் திருவிழாவில் பெரிய பெரிய முதலைகள், கழுகுகளுக்கு மகா பூசை நடக்கும். அதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## நாட்டில் 24 மணி நேரத்தில் வாகனவிபத்துக்களால் 6 பேர் பலி

24 மணி நேரத்தில் நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்தனர்.

கிளிநொச்சி, மொரவெவ, அநுராதபுரம், வலஸ்முல்ல மற்றும் அரலகங்வில ஆகிய இடங்களில் இந்த வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பரந்தன் பகுதியில் A9 வீதியில் பேருந்து ஒன்றுடன் டிப்பர் மோதி விபத்துக்குள்ளான நிலையில் அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் டிப்பருடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் மற்றும் அதன் பின்னிருக்கையில் பயணித்தவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் பரந்தன் மற்றும் முதூர்வல பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 27 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மொரவெவப் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் துவிச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த தம்பலகாமத்தைச் சேர்ந்த 71 வயதுடையவர் பலியானார்.

இதேவேளை அநுராதபுரம், மல்வத்துஓயா இரும்புப் பாலத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கலென்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம் வலஸ்முல்ல-ஹக்மன வீதியில் உள்ள நதுவலப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று நாய் மீது மோதி கவிழ்ந்ததில் மீயெல்ல பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவர் பலியானார்.

அரலகன்வில - மனம்பிட்டிய வீதியில் உள்ள மெதகமப் பகுதியில் பாதசாரி மீது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த தேவகலப் பகுதியைச் சேர்ந்த 77 வயதுடையவர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தலைமையிலான இலங்கைப் பாராளுமன்றக்குழு இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அழைப்பின் பேரில் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தலைமையிலான இலங்கை பாராளுமன்றக் குழு செவ்வாய்க்கிழமை (26) முதல் சனிக்கிழமை (30) வரை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இந்தியா முழுவதும் அமைந்துள்ள மருத்துவ ஆராய்ச்சி பல்கலைக்கழகம் மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தைப் பார்வையிட்டார்.

இது இந்தியாவில் மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் சுகாதாரப் பராமரிப்பில் முன்னணி நிறுவனமாக உள்ளது. இந்தியாவின் டில்லியில் அமைந்துள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் இயக்குநர் எம் ஸ்ரீனிவாஸ் அவர்கள் மற்றும் ஊழியர்கள் சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸவை வரவேற்றார்கள்.

பின்னர் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருக்கு மருத்துவ அறிவியல் நிறுவனம் வழங்கும் சேவைகள், மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை உள்ளிட்ட அதன் பரந்தளவிலான மருத்துவ சேவைகள், சிறப்பு நோயாளி பராமரிப்பு மற்றும் சுகாதார நிபுணர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் மற்றும் இந்தியா முழுவதும் அதன் செயற்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது.

இந்த நிறுவனம் மருந்து உற்பத்தி, சுகாதாரத் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் இலங்கை, இந்தியாவில் டெங்கு அச்சுறுத்தல் மற்றும் ஊட்டச்சத்து பிரச்சினைகள் குறித்த ஆராய்ச்சியில் ஒத்துழைப்பது குறித்து விளக்கப்பட்டது. (ம-7)

## விசேட சுற்றிவளைப்பு 5,680 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (29) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 680 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 20 பேரும் சந்தேகத்தின் பேரில் 815 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 315 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 210 பேரும் மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 86 சாரதிகளும் கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 56 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4,178 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## வீட்டிலிருந்து உணவை பெற்றுக்கொள்ள அனுமதிக்குக

### ராஜித சேனாரத்ன கோரிக்கை


வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வீட்டு உணவுகளைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகச் சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை பரிசோதித்த சிறைச்சாலை மருத்துவர்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் அளவுக்கு நோய் பாதிப்பு எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளதாகவும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் தன்னை கைதுசெய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை தற்காலிகமாக இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மனுவை நீதிமன்றம் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தங்கரதப் பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)




மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலை திறந்தவெளி அரங்கில் இடம் பெற்றது. (படம்:சுபேசன்)



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவில் இலங்கை புனித ஜோன் அம்பியுலன்ஸ் அமைப்பின் 100 இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கியிருந்தனர்.




யாழ்.கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலயத்தின் பரிசில்தினம் அண்மையில் பாடசாலையின் அதிபர் கு.திலீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பாடசாலையின் ஸ்தாபகர் கணபதியர் வேலுப்பிள்ளை சரவணமுத்து அவர்களின் நினைவாக 2024, க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கப் பதக்கம் வழங்கி வைக்கப்பட்டதுடன் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.லதாங்கி அம்பிகைபாலன், சிறப்பு விருந்தினராக கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலய ஓய்வுநிலை அதிபர் சண் வாமதேவன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவுகளின் ஆரம்ப நிகழ்வும், பாடசாலையின் தர உயர்வு நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:தேவானந்தன்)



வட்டுக்கோட்டை துணைவி கிராமத்தில் 400 வருடங்களுக்கு மேல் பழைமையான பிரகேஷ்வன் ஆதி சிவன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)






தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளுக்கு இடையிலான "மேலைத்தேய வாத்தியப் போட்டிகள்" சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. (படம்:சுபேசன்)



தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலும்- இனங்களுக்களிடையே சக வாழ்வினை ஏற்படுத்தும் எண்ணத்திட்டத்திற்கு அமைவாகவும் அண்மையில் நாவற்குழியில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. (படம்:சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டு மக்...

நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 26ஆம் திகதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கைது செய்யப்...

பட்டனர்.

கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட 5 குற்றக்குழு உறுப்பினர்களை ஏற்றிய விமானம் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவிலிருந்து நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களின் பின்னணியில் செயற்பட்டதாகக் கூறப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களின் குறித்த உறுப்பினர்கள் கடந்த 28ஆம் திகதி இலங்கைப் பொலிஸாரால் இந்தோனேசியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 200ஐ அண்மித்த...

நேற்றுச் சனிக்கிழமையோடு 180 மனித எச்சங்கள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதோடு 197 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## நீதி கோரி...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி கிழக்கில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் மக்கள் ஒன்றிணைந்து சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்றுச் சனிக்கிழமை (30) மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து ஆரம்பமாகி காந்திபூங்கா வரை இடம்பெற்று, அங்கு ஐக்கிய நாடுகளுக்கு கையளிப்பதற்கான மகஜர் வாசிக்கப்பட்டு நிறைவடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஊர்திப் பவனிகள் இடம்பெற்றதுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்களை அவர்களது உறவினர்கள் ஏந்தியிருந்தனர்.

செம்மணி மனிதப் புதைகுழிகள் தமிழின அழிப்புக்குச் சான்று என்றும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறும் வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கேட்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிநாத், சிறிநேசன், கோடீஸ்வரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், அரியநேத்திரன், பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், மாநகர சபை முதல்வர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ம-7)

## செம்மணி மனிதப்...

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் 38ஆவது நாள் அகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வின்போது ஒன்றன்மேல் ஒன்றாக இரு எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அதனைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த இரு எலும்புக்கூடுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்றாக அகழ்ந்து எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஒரு எலும்புக் கூட்டின் நெஞ்சுப் பகுதியில் மற்றைய எலும்புக் கூட்டின் தலைப்பகுதி காணக் கூடியவாறு அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதி சுத்தப்

செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று சனிக்கிழமை மாலை அவற்றை அகழ்ந்து எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னான அகழ்வுப் பணிகளின் போதும் பின்னிப் பிணைந்த நிலையில் இரு எலும்புக் கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்டிருந்தது.

அந்த வகையில் ஒன்றன் மேல் ஒன்றாக இதுவரையில் மூன்று சந்தர்ப்பங்களில் 06 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணியில் இதுவரை 181 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதோடு 197 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## ஜனாதி...

தில்பல்வேறு அபிவிருத்திப் பணிகள் தொடர்பான வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதன் படி மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு, யாழ். மாவட்டச் செயலகத்தில் கடவுச்சீட்டு அலுவலகம், மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணி ஆகியவற்றில் பங்குகொள்ளவுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார். (ம-7)

# கொலைச் சந்தேக நபர் தெஹிவளையில் கைது

(கொழும்பு)

தெஹிவளை கடற்கரை வீதியில் ஒருவரின் கழுத்தை நெரித்துக் கொலை செய்த குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 05 ஆம் திகதி குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்ற நிலையில் அது தொடர்பான விசாரணைகளை தெஹிவளைப் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று இரவு தெஹிவளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சைத்யா வீதிப் பகுதியில் வைத்து 38 வயதுடைய குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளையிடப்பட்ட வர்த்தக நிலையம்

கம்பளை நகர் பிரதான சந்தையில் அமைந்துள்ள தொலைபேசி வர்த்தக நிலையமொன்றில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கம்பளை நகரின், கண்டி வீதியில் அமைந்துள்ள குறித்த வர்த்தக நிலையத்தின் கூரை வழியாக உள் நுழைந்த கொள்ளையர்களால், அங்கிருந்த பெறுமதியான தொலைபேசிகள் பல திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளர் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாக கம்பளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)


## வாடகைக்கு

யாழ்.நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதியில் 2 மாடிக் கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு. கீழ்த்தளம் 210 சதுர அடியும் ஏனைய 2 மாடிகள் 200 சதுர அடி விஸ்தீரணமும் கொண்டது.

தனியார் நிறுவனங்கள் (கல்வி நிறுவனம், பினாஸ் நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

(C-3770)

076 164 6579

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி தினேஷ் பேக்கரி அருகில் புதிய வீட்டின் 1ம் மாடி 5 அறைகளுடன் வாடகைக்கு உள்ளது. தரகர் தொடர்பு கொள்ளத் தேவையில்லை.

(5184)

077 974 1382

## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

(C-3772)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## SB TRAVELS AND TOURS PVT LTD

சகல நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களை குறைந்த விலையிலும் மற்றும் யாழ்ப்பாணம், கொழும்பிலிருந்து இந்தியாவிற்குச் செல்ல Rs.37,900 இருந்தும், இந்தியா விசாக்களும் செய்து தரப்படும்.

(C-3767)

யாழ்ப்பாணம் : 021 222 8555, 076 691 1082
கொழும்பு : 011 244 6666, 077 108 3480
இணையத்தளம் : www.sbtravels.lk (Conditions apply)

## சொர்க்கம் திருமண சேவை கனடா

51 வயது விவாகரத்து ஆணுக்கு இலங்கையில் பெண் தேவை.
34 வயது கனடா சிட்டிசன் மணமகனுக்கு இலங்கையில் மணமகள் தேவை.

(C-3775)

+141 6666 1855
077 200 0230

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(5158)

T.P : 077 780 3970

## Mathematics Classes

தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கான Personal மற்றும் Group Classes.

- Home visit
- Online classes (Zoom மூலம்)

(5181)

076 223 1657

## Win Repair

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம். அத்துடன் வீட்டு பெயின்றிங் வயறிங், பிளம்பிங் வேலைகளும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு :

(5192)

076 834 6136

## ஓட்டோ விற்பனைக்கு

YN xxxx எனும் தொடரிலக்கத்தை உடைய நீல நிற ஓட்டோ செல்வா பலஸ் பூநாரிமடம் அருகே உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(5185)

077 435 0680
076 656 6231

## வாடகைக்கு

இரண்டு மாடிக் கடைத் தொகுதி வாடகைக்கு விடப்படும்.



(5186)

1ம் மாடி – 2500 சதுர அடி, 3 Phase மின்சாரம்
2ம் மாடி – 2500 சதுர அடி, 3 Phase மின்சாரம்

இடம் :
83,தபால் நிலைய வீதி, சாவகச்சேரி

தொடர்புகளுக்கு

077 565 9990/047 9843 9960

## மணமகன் தேவை

யாழ்., 1970, கன்னி இராசி, பட்டதாரி, தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பெண்ணிற்கு படித்த மணமகன் தேவை.

(1501)

077 783 2943 (Whatsapp)

## மணமகன் தேவை

1992 ஆம் ஆண்டு பிறந்த சதயம், 3ம் பாதம், விவாகரத்து ஆன பெண்ணிற்கு மணமகன் தேவை.

எதிர்பார்ப்பு : வெளிநாடு

(5188)

076 020 5469

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- சுத்திகரிப்பு மேற்பார்வையாளர் (ஆண்/பெண்) – யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி
- சாரதி – யாழ்ப்பாணம்

நேர்முகத்தேர்வு :
01.09.2025 தொடக்கம் 03.09.2025
(காலை 10 மணி முதல் மாலை 04 மணி வரை)

இடம் :
758, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

(C-3766)

077 048 1489

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 170/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2750/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 260/= | |
| 1Kg சிவப்பு கௌபி | - 1150/= | |
| 1Kg கடலை | - 378/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | 70/= |

Max 01



1140/= 1200/= 400g Anchor



280/= 320/= 1Kg சன்லைட் பவுடர்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1503)

HappySupermarket 0777 8080 30

## சிறுநீரகம் தேவை

48 வயதுடைய நபர் ஒருவருக்கு B+, O+ குருதி வகையுடைய சிறுநீரகம் தேவை. சிறுநீரகம் தர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(5191)

077 893 9807
077 792 5831

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3772)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

## விற்பனைக்கு

01. யாழ்., K.K.S வீதியில் சிவன்கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 150 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட ஆறுபரப்புக் காணியும்
02. யாழ்., பிறவுண் வீதிச் சந்தியில் இரண்டு பரப்பில் அமைந்த 6 கடைத் தொகுதியும்
03. யாழ்., பிறவுண் வீதியில் 30 அடி அகலமும் 130 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும் உடன் விற்பனைக்குண்டு.

(C-3774)

தொடர்பு : 077 723 2535


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.